REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 30—5—48 | இதழ் 50

## கவர்னர்—ஒரு விக்கிரகம்

—✱—

"கவர்னர் பதவி ஒன்றுக்கும் பிரயோஜனம் கிடையாதென்று நினைத்துவிடக்கூடாது. நமது கோயில்களின் புகழை நினைத்துக் கொள்ளுங்கள். கோயிலில் ஓர் விக்கிரகத்தைப் பூசை செய்கின்றோம். கோயிலுக்குள்ளிருக்கும் மக்கள் சரிவர நடந்துகொள்ளாவிடில், கடவுளிடமிருந்து ஏதும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், கோயிலுக்குள்ளிருக்கும் விக்கிரகத்தை அங்கிருந்து அகற்றிவிட்டால், கோயில் பிரயோசனமற்றதாய்ப் போய்விட்டதாகவே மக்கள் கருதுவர். பொம்மைக் கடவுளுக்கு உயிர் இல்லையென்றாலும், அதன்பால் பாமர மக்களுக்கு ஓர் நம்பிக்கை இருக்கின்றது. இதே போல் சர்க்கார் என்பது ஓர் கோயிலைப்போலாகும். கவர்னர் இல்லாத சர்க்கார், விக்கிரகம் இல்லாத கோயிலைப் போன்றதாகவே இருக்கும்."

சி. ஆர்; மே. வ. கவர்னர்.

## நாம் இருவர்

16-ம் பக்கத் தொடர்ச்சி

தொடமுயல்கின்றன, முடியவில்லை. அவை மூன்றும் ஒன்று சேர்ந்தால் தான் இத்தகைய சிக்கலான பிரச்னைகள் தீரும். ஆனால் இன்றுள்ள நிலையில் நாம் ஒன்றும் செய்யமுடியாது. நாம் சட்டத்தின் காவலர்கள். நமக்குத் துணை சட்டம். நியாயத்தையும் நடைமுறையையும் கவனித்தால் தரும சங்கடம் வந்து சேரும்.'' என்று டில்லி நீதிபதி அறநெறி கூறுவதாகவும் கற்பனை செய்து பாருங்கள்.

உலகம் பலவிதம் என்பதற்கு மேற்கண்ட இவைகளே போதிய எடுத்துக்காட்டு. இவர்கள் யாவருக்கும் இடையில் சட்டம் நிற்கிறது. மதத்துக்குக் காவலாக மன்னர் பிரான் இயற்றிய சட்டம் அது. அந்தச் சட்டத்தின்படி சகுந்தலாக்கள் என்ன தீர்ப்புப் பெறுவார்கள் என்பதை நாம் அறியோம். அதன் பின் அவர்கள் வாழ்வு எப்படியிருக்கும் என்பதைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை. ஆனால் இத்தகைய சகுந்தலாக்கள் தோன்றக் காரணம் என்ன என்பதையே அறிய விரும்புகிறோம்.

துஷ்யந்தன் காலம் முதல் ராஜசேகரன் காலம் வரை எண்ணரிய சகுந்தலாக்கள் தோன்றியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறக்க முடியாது. அன்று தூருவாச முனியின் சாபத்தால் துஷ்யந்தன் சகுந்தலையை மறந்தான் என்று கூறப்பட்டது. இன்று பணத்தாசையால், சாதிசமய ஆணவத்தால் சகுந்தலாக்கள் மறக்கப்படுகின்றனர். அவ்வளவு தான் வேற்றுமை. அன்று முதல் இன்று வரை சகுந்தலாக்களின் துயர்தீர்ந்த பாடில்லை.

இதோ இரண்டு சகுந்தலாக்கள் மட்டும் சென்னையிலும் டில்லியிலும் நீதி மன்றமேறி நிற்கிறார்கள். இவர்களைப்போன்ற எத்தனை சகுந்தலாக்கள் மன்றமேற முடியாமல் குன்றிக் குழைந்து சமூகச் சட்ட திட்டங்களுக்கு அடங்கி ஆற்றுவாரற்று அழுதிருப்பார்கள்? அவர்கள் அழுத கண்ணீர் ஆறுகள் கொள்ளுமா? கடலிலே நிறைந்துள்ள உப்பு நீர் அனைத்தும் அபலைகளாகிய சகுந்தலாக்கள் வடித்த கண்ணீர் வெள்ளம் என்று கூறினால் மிகையாகுமா? ஒரு பக்கம் இராமன்களையும் ராஜசேகரன்களையும் ஆணுலகம் உற்பத்தி செய்து கொண்டேபோகப், பெண்ணுலகம் இவர்களுக்குச் சகுந்தலாக்களைப் பலி கொடுத்துக் கொண்டே போனால் அதன் முடிவு தான் என்ன? ''ஆணும் பெண்ணும் நிகர் எனக்கொண்டு அறிவிலோங்கி இவ்வையம் தழைப்பது'' எங்ஙனம்?

சகுந்தலாக்கள் இன்றைய பாழடைந்த சமூக அமைப்பின் சாரம். சாதிசமய சட்டதிட்டங்களின் எதிரொலி. பொருளாதார ஏற்றத்தாழ்வின் அபாய அறிவிப்பு என்பது நன்கு விளங்கும். படித்த பெண்களும் ஏமாறுகிறார்களென்றால் படிப்பைப் பயனற்றதாக்கும் அளவுக்கு மதமும் புரோகிதமும், மூடநம்பிக்கையும் கொண்ட சூழ்நிலை அமைந்திருக்கிறது என்பது பொருள். படித்த ஆண்களே ஏமாற்றுகிறார்கள் என்றால் சமூக அமைப்பு ஆண்களின் சுயநல வேட்டைக்குப் பக்கத்துணையாயிருக்கிறது என்று தான் அர்த்தம்.

சமூக அமைப்பையும் திருமண முறைகளையும் தலைகீழாய் மாற்றியமைக்க வேண்டுமென்பதற்குச் சகுந்தலாக்களின் உதாரணமே போதும்.

உளுத்துப்போன மத சம்பிரதாயங்கள் ஒழியவேண்டும். உதவாக்கரையான சாதிசமயங்களைச் சமாதியிற் சேர்க்கவேண்டும். சமதர்மத்துக்கு முட்டுக்கட்டையாயுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒழிய வேண்டும். அப்பொழுது தான் இராமன்களும் இராஜசேகரன்களும் தோன்ற மாட்டார்கள். சகுந்தலாக்களின் கண்ணீரும் அடங்கும்.

●

## கடவுளுக்கும்

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆற்றல் தன்னுள் அடக்கி நின்று, கடவுள், கனவாலும், கடைக்கண் பார்வையாலும், அசரீரியாலும் மட்டுமல்ல, கடிதம் எழுதுவதன் வாயிலாகவும் தம்முடைய ஆற்றலைக் காட்டி அன்பர்களை ஆதரிப்பாரென்பதும் அறியக்கிடக்கின்றது. எனவே கடவுளுக்கு எழுதப்படிக்கத் தெரியும் என்பதைத் தவிர, வேறு எந்த வகையிலும் பொருள்கொள்ள முடியாத இந்நிகழ்ச்சி, கடவுளைப்பற்றித் தப்புக்கணக்குப்போட்டுக் கொண்டிருப்பவர்கட்கு ஓர் விழிப்பை உண்டாக்கும் என்று நம்புகிறேன். அதோடு, வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதன் என்பவனோடு, பாணபத்திரரை யாழ் வாசிக்கவிடாமல் தடுத்துத்,தாமே அப்பணியினை மேற்கொண்டு, பாணருக்கு அழியாத இழிவை உண்டாக்கிய சொக்கநாதர், பாணரின் வறுமையைப் போக்குவதற்காகப் பாண்டியனுடைய பணத்தைத் திருடியதும், பின்னர் சேரமன்னனுக்குக் கடிதம் எழுதி அவருடைய வறுமையைப் போக்கியதுமாகக் கூறப்படும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிகழ்ச்சிகளையும் புராண அன்பர்கள் ஒப்பு நோக்கிப்பார்த்துக் கடவுளைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தில் திருத்தம் செய்துகொள்வதும் மிக மிக இன்றியமையாததாகும்.

✲

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

—✲—

சென்ற வாரத்தில், ஏஜண்டுத் தோழர்கள், தங்கள் பாக்கியை அனுப்பிவைக்க வேண்டுமென்றும் இல்லையேல் பத்திரிகை அனுப்பப்படமாட்டாதென்றும் தெரிவித்திருந்தோம். பலர் இன்னும் தங்கள் பாக்கியை அனுப்பாத காரணத்தால் மீண்டும் இவ்வறிக்கை வெளியிட வேண்டியதாயிற்று. எனவே, 1—6—48-க்குள் பாக்கி முழுவதையும் அனுப்பத் தவறும் ஏஜண்டுகளுக்கு எக்காரணம் கொண்டும் பத்திரிகை அனுப்பப்படமாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்.

## காதணிவிழா

16—5—48 ஞாயிறு காலை 9-மணிக்கு பொன்மலை காலனி C. டைப் 168/1 நெ, வீட்டில்பொன்மலை திராவிடர் வாலிபர் கழக நி[illegible]வாக உறுப்பினர் தோழர். வி[illegible] கோபால் புதல்விகளான நிர்மலா, அனுசூயா, திலகவதி, ஆகியவர்களுக்கு காதணிவிழா தோழர் [illegible] பாரங்குசம் தலைமையில் நடை[illegible] பெற்றது. அதுசமயம் தோழ[illegible] டி. கே. சீனிவாசன், மற்றும் பல[illegible] ''சீர்திருத்தம்'' என்பது பற்[illegible] சொற்பொழிவாற்றினர்.

—

# கடவுளுக்கும் எழுதப் படிக்கத் தெரியும்!

—:(0):—

பாண்டிய மன்னனுடைய பண்டாரத்திலிருந்து பணத்தைத் திருடிப் பாணபத்திரருக்குக் கொடுப்பதை நிறுத்திக்கொண்ட சொக்கநாதர், பாணர் வறுமையால் வாடுவதைத் தடுக்க ஒரு புதுவழியைக் கண்டுபிடித்தார். அதாவது, சேரநாட்டு மன்னனாகிய பெருமாக்கோதையார் என்பவருக்கு ஒரு கடிதம், பாணபத்திரருக்குப் பணஉதவி செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்தி எழுதி, அதனைப் பாணரிடம் கொடுத்தனுப்பினர். இதேது, ஒரு புதுமையாக இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? பரமசிவனாவது பாணபத்திரருக்குக் கடிதம் கொடுப்பதாவது! மக்கள், தொலைவிலிருக்கும் தங்கள் நண்பர்களுக்கோ உறவினர்களுக்கோ கடிதம் எழுதி அனுப்புவதுபோல், கடவுளும் கடிதம் எழுதினர் என்று கூறுவது உண்மையாகவே கடவுளைக் கேலி செய்யும் நாத்திகர்களுடைய வேலையேயன்றிச், சிறிதளவாவது கடவுளிடத்தில் அன்புகொண்டவர்கள் இவ்விதமெல்லாம் நாக்கூசாது கூறமாட்டார்கள் என்றுகூட எண்ணுவீர்கள். கடவுள், ஒருவருக்கு உதவிசெய்ய வேண்டுமென்று விரும்பினால், அந்த விருப்பம் கடவுளுக்கு உண்டாகி மறைவதற்குள், கடவுள் எந்தவிதமான உதவியைச் செய்ய வேண்டுமென்று விரும்பினாரோ, அந்த உதவியை அந்த அன்பர் அரைநொடியில் அடைந்துவிடுவாரே! ஒன்றைச் செய்ய வேண்டுமென்று நினைப்பதும், பின்னர் அந்நினைப்பைச் செயல்முறையில் கொண்டுவருவதும் கேவலம் மக்கள் கையாளும் முறையேயன்றி மகிமைவாய்ந்த மகேசுவரனுடைய முறையாகாதே! மகேசுவரனுடைய அருட்டிறத்தை அறியாதார், அவர், ஒன்றைச் செய்யவேண்டுமென்று நினைத்தார் என்றும், பின்னர் அந்நினைப்பைச் செயல்முறையில் கொண்டுவந்தார் என்றும் அறிவிழந்து கூறுவர். சிவன் முப்புரங்களையும் எரித்த அற்புதத்தை அறிந்தவர்கள் இப்படியெல்லாம் கூறமாட்டார்கள். அவருடைய ஒரு கோபச் சிரிப்பே முப்புரங்களையும் அரைவிநாடியில் சாம்பலாக்கிற்று என்ற உண்மையினை அறியும் ஆற்றல் பெற்ற எவரும் அவருடைய நினைப்பையும் செயலையும் இரண்டாக்கி, நினைத்தார்—செய்தார் என்று பிரித்துக் கூறவேமாட்டார்கள். கடைக்கண் பார்வையினாலேயே எதனையும் செய்துமுடிக்கும் ஆற்றல் பெற்ற ஆண்டவன், ஒன்றைச் செய்ய வேண்டுமென்று நினைத்தார் என்றும், பின்னர் அதனைச் செய்துமுடித்தார் என்றும் கூறுவது அவருடைய அளப்பரும் தன்மையை அறியாதார் கூற்றாகும். கடவுளின் எண்பெருங் குணங்களான இயல்பாக அறிதல், எல்லாவற்றையும் அறிதல், மயக்கமின்மை, பேரிரக்கம், அளவில்லாத வல்லமை, எல்லையில்லாத இன்பம், பரிசுத்தமான உடல், சுதந்திரமுடைமை ஆகிய நற்பண்புகளின் உண்மைப்பொருளை உணரமுடியாதார்தான் அவருடைய முழுமுதல் தன்மைக்கு இழுக்குத் தேடுவர். மற்றையோர் எவரும் கடவுள்மீது இத்தகையகுற்றத்தைச் சுமத்தவே மாட்டார்கள் என்றுகூட எண்ணுவீர்கள்.

ஆனால், பாணபத்திரருக்குப் பணஉதவிசெய்யவேண்டுமென்று பரமன் நினைத்தார் என்றும், அந்நினைப்பைச் செய்துமுடிக்கச் சேரமன்னனுக்குக் கடிதம் எழுதியனுப்பினர் என்றும் புராணத்திலேயே கூறப்பட்டுள்ளது.

> "பாணனார் பத்திரனார்க்கு,
> நன்மை நீடு பெருஞ் செல்வம்
> நல்கவேண்டி அருள்புரிவார்."

என்று சேக்கிழாரே கூறியுள்ளார். அதாவது, பாணபத்திரருக்குப் பொருளுதவச் சொக்கநாதர் திருவுளம் கொண்டார் என்பது இதன் பொருளாகும். திருவுளம் கொள்ளுதல் என்பதற்கு நினைத்தல் என்று பொருள். சொக்கநாதர் இவ்விதம் நினைத்த பின்னர், பாணபத்திரரின் கனவில் தோன்றி, "சேரன் என்னிடத்தில் அன்புடையவன்; அவன் உனக்குப் பொருள் உதவுவான்; அதன்பொருட்டு நாம் ஒரு திருமுகம் (கடிதம்) கொடுக்கிறோம்; நீ போய் வா" என்று கூறியதாகவும் சேக்கிழாரே கூறியுள்ளார்.

> "இரவு கனவில் எழுந்தருளி
> என்பால் அன்பால் எப்போ
> தும், பரவுசேரன் தனக்குனக்
> குப் பைம்பொன் காணம் பட்
> டாடை, விரவு கதிர்செய் நவ
> மணிப் பூண் வேண்டிற் றெல்
> லாம் குறைவின்றித், தர நம்
> ஓலை தருகின்றோம் தாழாதேகி
> வருகென்று"

என்ற செய்யுளால் விளக்கப்பட்டுள்ளது. எனவே, கடவுள், பாணபத்திரருக்குக் கடிதம் எழுதிக் கொடுத்தார் என்ற செய்தி இதனால் வலியுறுதல் காண்க. இவ்வளவு விளக்கத்துக்குப் பின்னரும், கடவுள் கடிதம் எழுதினர் என்றால், எப்படி எழுதினர்? அக்கடிதத்தில் உள்ள வாசகங்கள் யாவை? என்றுகூட ஒருவேளை சிலர் கேட்கக்கூடும். ஆதலால் அக்கடிதத்தையும் இங்கு வெளியிடுகிறேன்.

> "மதியலி புரிசை மாடக்கூடல்
> பதிமிசை நிலவு பானிற வரிச்
> சிற, கன்னம் பயில் பொழில்
> ஆலவாயில், மன்னிய சிவன்
> யான் மொழி தரு மாற்றம்
> பருவக்கொண் மூப்படியெனப்
> பாவலர்க், குரிமையின் உரிமை
> யின் உதவி ஒளிதிகழ், குருமா
> மதிபுரை குலவிய குடைக்
> கீழ்ச், செருமா உகைக்குஞ்
> சேரலன் காண்க, பண்பால்
> யாழ்வல்ல பாணபத்திரன் தன்
> போல் என்பால் அன்பன் தன்
> பால் காண்பது கருதிப் போக்
> தனன், மாண்பொருள்
> கொடுத்து வரவிடுப்பதுவே."

இந்த வாசகங்கள் கொண்ட கடிதம் தான் பரமசிவனால் எழுதப்பட்டுப் பாணரிடம் கொடுக்கப்பட்டது. எனவே, இனி யாரும் இந்த விஷயத்தில் சந்தேகம் கொள்ளமாட்டார்கள் என்றே நம்புகிறேன். "நாம், கடவுள் கடிதம் எழுதிக் கொடுத்திருக்க மாட்டார் என்றுதான் நினைத்தோம்! இப்பொழுது பார்த்தால் அது உண்மையென்றே தெரிகிறது! சேக்கிழார் பெருமானன்றோ இவ்வுண்மையினைக் கூறியுள்ளார்! இதனை எப்படி மறப்பது" என்று சைவ மெய்யன்பர்கள் கருதுவரோ என்னவோ, நாம் அறியோம்.

ஆனால், அவர்கள் ஒன்றைமட்டும் தங்கள் கருத்தில் இருத்திப் பார்க்க வேண்டும்.

பாணபத்திரரின் வறுமையைப் போக்க விரும்பிய சொக்கநாதர், பாண்டியனுடைய பண்டாரத்திலிருந்து பணத்தைத் திருடிப் பாணருக்குக் கொடுத்தார் என்று கூறிய பின்னர், கடவுளுக்கு, மக்களிடம் இல்லாத எட்டுக் குணங்களும், அருட்டிறங்களும் பிறவும் உண்டென்று எப்படிக் கூறமுடியும்? மக்களிற் கூடப் பெரும்பாலோர், பிறருடைய பொருளைத் திருடுவது குற்றமென்றும் தகாத செயலென்றும் கருதும்போது, பிறருடைய பொருளை அவர்கள் அறியாமல் திருடிய ஒருவரைக் கடவுள் நிலையில் வைத்துப் பேசுவதும், அத்தகையவரே மக்களுக்கும் பிற உயிர்களுக்கும் மேலான பரம்பொருள் என்றும் எப்படிக் கூறுவது? பாண்டியனுடைய பண்டாரத்திலிருந்து பணத்தைத் திருடிப் பாணபத்திரருக்குக் கொடுத்த கடவுள், சேரமன்னனுடைய பண்டாரத்துள்ளும் புகுந்து திருடியிருக்கலாமே! சேரனுடைய பண்டாரம், திருடர்கள் உள்ளே நுழையமுடியாத அளவுக்கு அதிகமான பாதுகாப்போடு இருந்த காரணத்தால், சொக்கநாதரால் திருடமுடியாது போயிற்றா? அல்லது உள்ளூரில்தான் உளவறிந்து திருட முடியும்; வெளியூரில் திருடுவது என்பது எளிதில் முடியக்கூடிய காரியமல்லவென்று கடவுள் கருதினாரா? அல்லது பாண்டியனுடைய பணத்தைத் திருடலாம்; சேரனுடைய பணத்தைத் திருடக்கூடாதென்று எண்ணினாரா? பாணருடைய கனவில் தோன்றி, "நீ சேரனிடம் சென்று உனக்கு வேண்டிய பொருளைப்பெற்றுவா" என்று கூறிய கடவுள், சேரனுடைய கனவிலும் தோன்றி, "என்னுடைய அன்பனான பாணபத்திரன் உன்னிடம் வருகின்றான். அவனுக்கு வேண்டிய பொருளைக்கொடுத்தனுப்பு" என்று ஏன் சொல்லவில்லை. கனவில்சொன்னால், அதனைச் சேரன் நம்பமாட்டானா? அல்லது கனவிலேயே சேரனுக்கு நம்பிக்கையில்லையா? கனவில் அவனுக்கு ஒருவேளை நம்பிக்கையில்லையென்றால், அசரீரியாகவாவது சொல்லியிருக்கலாமே! ஒரு சமயம் அசரீரியை அவன் நம்பியதாகவும் சொல்லப்படுகின்றதே! சேரனுடைய பூசைக்குரிய கடவுள் தில்லைக்கூத்தனென்றும், பூசை முடிவில் தில்லைக்கூத்தன் தன்னுடைய காலில்உள்ள சிலம்பின் ஒலியைச் சேரனுக்குக் கேட்பிப்பது வழக்கமென்றும், ஒரு நாள் சிலம்பொலி கேட்காதுபோகவே, சேரன் உடைவாளை உருவித் தற்கொலை செய்யமுயன்றான் என்றும், உடனே தில்லைக்கூத்தன், "சேரனே! இன்று சுந்தரன்நம்மைச் சிற்றம்பலத்தில் கண்டு தமிழ் பாடினான், அத்தமிழ் என்னைத் தன்வயப்படுத்திற்று, அதனால் சிலம்பொலி தடைப்பட்டது" என்று அசரீரியாக அருளிச் செய்தார் என்றும் கூறப்படுகின்றதே! எனவே, அசரீரியில் நம்பிக்கைகொண்ட சேரனுக்கு, பாணரின் வருகைபற்றியும், அவருக்குப் பொருளுதவி செய்ய வேண்டியது குறித்தும் அசரீரியாகச்சொல்லியிருக்கலாமே! கடிதம் எழுதி ஒருவரை வேண்டிக்கொள்ளும் அற்பமுறையைக் கடவுள் ஏன் மேற்கொண்டார்? கனிவுரை கலந்த கடிதம் எழுதியாவது காரியத்தைச் சாதிக்கவேண்டுமென்று நம்போலும் மக்களன்றோகருதுவர்! மகேசுவரன் —அதிலும் நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் முடிக்கும் ஆற்றலுள்ள ஆண்டவன் — கனவில் தோன்றிக் காரியத்தை முடிக்கவல்ல கடவுள்— அசரீரியால் அற்புதங்களைச் செய்யும் அரூபி — மாறுவேடத்திலும், உண்மை வடிவத்திலும்வந்து உலகை உய்விக்கும் உத்தமர்- எல்லாம்வல்ல எம்பெருமான், கேவலம் ஒருகடிதம் எழுதி, அதில் தன்னை இன்னார் என்று அறிமுகப்படுத்துவதும், உதவி செய்ய வேண்டியவரை உச்ச நிலையில் வைத்துப் புகழ்வதுமான சிறுசெயலைச் செய்யலாமா? மக்களிற் கூடச்சிலர், தம்மால் ஒருவருக்கு உதவி செய்யமுடியவில்லையென்றால், அதற்காகப் பிறரை நாடி அவர்களிடம் பல்லிளித்து நின்று, இன்னாருக்கு இன்ன உதவி செய்க என்று கேட்பதைக் கேவலமாகக் கருதுபவர்கள் இருக்கிறார்கள் என்றால், கடவுள், இந்தக் காரியத்தைத் தன்னையும் தன்னுடைய ஆற்றலையும்மறந்து செய்திருக்கலாமா? கடவுளுடைய சினமும் — சிரிப்பும்— கடைக்கண் பார்வையும் எத்தனையோ அற்புதங்களையும் அருஞ்செயல்களையும் செய்திருக்கும்போது, ஒருவருக்கு உதவி செய்யும் அற்ப காரியத்துக்காக அவர் ஒருவரின் தயவை நாடிக் கடிதம் எழுதியிருக்கலாமா?

இனிக், கடவுள் கடிதம் எழுதினார் என்பதை உண்மையெனக் கொண்டாலும், அக்கடிதம் கடவுளால்தான் எழுதியனுப்பப்பட்டதென்பதைச் சேரமன்னன் எப்படி ஒப்புக்கொண்டான்? அல்லது கடவுள் கடிதம்கூட எழுதுவார் என்பது சேரனுக்குத் தெரியுமா? இதற்குமுன், கடவுள் யாருக்காவது கடிதம் எழுதியிருக்கிறாரா? அப்படி எழுதியிருந்தாலாவது, "கடவுள் இன்னகாலத்தில், இன்னாருக்கு இன்ன காரியத்துக்காகக் கடிதம் எழுதினார்" என்று சேரன் எண்ணி, அந்தக்கடிதத்தையும்கடவுள்எழுதிய கடிதம்தான் என்று நம்பியிருப்பான்! கடவுள், எந்தக்காரியத்தைச் செய்வதானாலும், அதனை அவர், நேராகவோ,மாறுவேடம் பூண்டோ, கனவில் தோன்றியோதான் செய்வாரேயன்றிக், கடிதம் எழுதுவதன் வாயிலாக அவர் எந்தக் காரியத்தையும் செய்தது கிடையாதே! அப்படியிருக்கப், பாணபத்திரரால் எடுத்துச் செல்லப்பட்ட கடிதம், கடவுளால்தான் எழுதியனுப்பப்பட்டதென்பதைச் சேரன் எப்படி ஒப்புக்கொண்டிருப்பான்? பாணபத்திரரின் கனவில் தோன்றி, "நாம் தரும் கடிதத்தைச் சேரனிடம் கொடுத்து, உனக்கு வேண்டிய பொருளைப்பெற்றுக்கொள்" என்று கூறியதுபோல், சேரனுடைய கனவிலும் தோன்றி, "நாம் உனக்கு எழுதிய கடிதத்தைப் பாணபத்திரன் கொண்டுவருகின்றான்; அவனுக்கு வேண்டிய பொருளைக்கொடுத்து அனுப்பு" என்றாவது கூறினாரா? அப்படிக்கூறியிருந்தாலாவது, சேரன் அக்கடிதத்தைக் கடவுள் எழுதிய கடிதம்தான். என்று நம்பியிருப்பான். என்ற இன்ன பிற ஐயப்பாடுகள், அறிவு விளக்கம் பெற்று விழிப்படைந்த இஞ்ஞான்றை மக்களுக்கு உண்டாகாமல் இருக்கமுடியும் என்று எவராவது கருதமுடியுமா?

இனி, இந்நிகழ்ச்சியால் பெறப்படும் உண்மை என்னவென்றால், கடவுளுடைய எல்லாம்வல்ல ஆற்றலில் பிறர் பொருளைத் திருடுவது போன்ற இழிசெயல்களும் அடங்கியுள்ளன என்பதோடு, கடவுளுக்கும் எழுதப்படிக்கத்தெரியும் என்பதையும் அந்த எல்லாம்வல்ல

(2-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்



[23—5—48 தொடர்ச்சி]

அக்காவின் பேச்சைக் கேட்டு இளையபூபதி கடுங்கோபம் கொண்டதிலே, ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏராளமான பணச்செலவு அவருக்கு; அந்தப் பக்கத்திலேயே, செல்வாக்கு யாருக்கு; அவருக்கா? அல்லது பழையஜெமீன்தாரருக்கா? என்பது தான், பேச்சாக இருந்தது; போட்டிபலம்; இந்த நிலையில், பழைய ஜெமீன்தாரரின் செல்வாக்கைச் சிதைக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டுக்கு, என் அக்கா, முட்டுக்கட்டை போட்டால் இளையபூபதிக்குக்கோபம் வராமலிருக்குமா! அக்காவின் போக்கு எனக்கும் ஆச்சரியமாகவே இருந்தது. எங்கள்குடும்பத்தைக்கெடுத்து, அக்காவின் வாழ்வையே பாழாக்கின பழைய ஜெமீன்தாரர்மீது எந்த விதமானபழி சுமத்தினாலும் தகும்; அவருடைய மனநிம்மதியைக் கெடுக்க என்னசெய்தாலும் நல்லது தானே. ஊரார் கேவலமாகப் பேசும்படி அக்காவின் நிலைமையைக் கெடுத்தவருக்கு இந்தச்சமயத்திலே, இழிவும் பழியும், ஏளனமும் எதிர்ப்பும் கிளம்பட்டுமே; அவர் எவ்வளவு பெரிய சீமானாக இருந்தபோதிலும், அவருடைய மனதுக்கு வேதனைதர, எங்களாலும் முடியும் என்பதை அவர் உணரட்டுமே! அக்கா ஏன், இதைத்தடுக்கவேண்டும்! — என்று எண்ணினேன். உண்மையில் எனக்கும் கோபம்வந்தது. இளையபூபதி அதிகமாக ஒன்றும் பேசவில்லை. அவருடைய கோபம், பேசக்கூட முடியாதபடி அவரைச் செய்து விட்டது. கண்கள் சிவந்துவிட்டன. இதேதடா புதியஆபத்து, என்று நான் பயப்படத் தொடங்கினேன். விஷயமறியாமல், அக்கா, வீண்பிடிவாதம் செய்கிறாள், அவளுக்கு விளக்கமாகக் காரணங்களைக்கூறினால், சம்மதிப்பாள் என்று எண்ணி நான், நிலைமையைத் தெளிவுபடுத்தி, "அக்கா! பச்சாதாபப்படுகிறாயா அந்தப்பாவிக்கு! நமது குடும்பத்தை நாலாவழியிலும் கெடுத்தவருக்கு, உன்மனதிலே, எள்ளளவுகருணையும் கொள்ளாதே. வம்புகள் எவ்வளவு! வழக்கு எவ்வளவு! ஊர்க்காலிகளை ஏவிவிட்டு நமக்குஎவ்வளவுதொல்லைகள் கொடுத்தார். நமக்கென்று கொடுத்த நிலபுலத்தைக்கூட, கேஸ் ஜோடித்து அபகரித்துக்கொண்ட அந்த ஆசாமிக்குப் பாடம் கற்பிக்க இது சரியானதருணம். பைத்யக்காரத்தனமாக, பழையபாசத்தை எண்ணிக்கொண்டு, பிடிவாதம் செய்யாதே" என்று கூறினேன். நான், விளக்கமாகக் கூறக்கூற, அக்காவின் கண்களிலே நீர் தாரைதாரையாக வந்ததே தவிர, எங்கள் ஏற்பாட்டுக்குச் சம்மதிப்பதாக ஒருவார்த்தை வரவில்லை.

"பன்னிப்பன்னிக் கேட்கவேண்டாம் விமலா! முடியுமா முடியாதா? என்று ஒரே பேச்சாகக் கேட்டுவிடு, கடைசிமுறையாக," என்று இளையபூபதி கர்ஜித்தார். ஐயர் பேசினார். "ஜெமீன்தாரவாள்! ஆயிரம்தடவை கேட்டாலும், விமலா, பத்தாயிரம் தடவை கெஞ்சினாலும், கமலா, நமது ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கவே மாட்டாள். என்ன இருந்தாலும் நாமெல்லாம் சாதாரண 'மனுஷா' தானே! திரிபுரசுந்தரி சாட்சியாக, உமக்கு ஒரு கெடுதியும், துரோகமும் நான் செய்யமாட்டேன், என்று கோயிலிலே, சத்யம்செய்து கொடுத்திருக்காளே கமலா, எப்படி அதை மீறுவாள்" என்றார். நாங்கள்திகைத்துப்போனோம். இளையபூபதி, என்னய்யா இது, ஏதேதோ பேசுகிறாய்! —என்று சற்று எரிச்சலுடன் கேட்டார். அவளையே கேளுங்களேன்— என்று ஐயர் குறும்பாகக் கூறிவிட்டு ஜெமீன்தாரவாளுக்கு, துரோகம் செய்கிறாள் இவள், என்பதை விளக்குவதற்குத்தான், இந்தநோட்டீஸ் போடவேண்டும் என்ற பேச்சை எடுத்தேனே தவிர, நாம் ஜெயமடைவதற்கு, இதுதேவையுமில்லை என்று கூறிக்கொண்டே, நோட்டீசைக்கிழித்தெறிந்துவிட்டு, "எனக்குச் சில தினங்களாகச் சந்தேகம்; நமது எலக்ஷன் இரகசியங்கள், எதிரிக்கு எப்படியோ தெரிந்து, அவன் ஒவ்வொன்றுக்கும் ஒரு மாற்றுப் போட்டுக்கொண்டே வருவதைக் கண்டேன்; எப்படியடா, இங்கிருந்து விஷயம் வெளியே போகிறதுஎன்று, யோசித்தேன், யோசித்தேன் — கொஞ்சத்திலே உண்மை துலங்கவில்லை. கடைசியில் கண்டுபிடித்தேன். கமலாவையே, பழையஜெமீன்தார், இங்கு உளவாளியாக்கிக் கொண்டிருக்கிறார் என்ற உண்மை தெரிந்தது. பழையசினேகமல்லவா! மேலும், தங்கை இவ்வளவு நல்ல நிலைமையில் இருப்பதும், அவளுடைய தயவில் தான்வாழ்வதும், எப்படிப்பிடிக்கும்! இந்தக்காரியம் செய்து, பழையபடி ஜெமீன்தாரரின் சினேகிததைப் பெற்று, ஜொலிக்கலாம், என்று சபலம் தட்டிவிட்டது. இலேசாக, விஷயம் எனக்குஎட்டிற்று. சரி, என்று ஒருஆளை, இந்த விஷயமாகக் கவனிக்கும்படி, ஏற்பாடு செய்தேன்—பிறகுதான் முழுவிவரமும், கமலா செய்கிற துரோகமும் தெரியவந்தது. நேற்று மாலை, திரிபுரசுந்தரிகோயிலில், ஜெமீன்தாரரை, இவள், சந்தித்திருக்கிறாள். பிராகாரத்தில், நின்றுகொண்டு இருவரும் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார்களாம். இவள் அழுதாளாம், அவர் கண்துடைத்தாராம்! இருவரும், இதெல்லாம் நமது காலவித்யாசம் என்று கூறிக்கொண்டார்களாம். கடைசியில், திரிபுரசுந்தரி சாட்சியாக, நான் உங்களுக்குக்கேடோ, துரோகமோ செய்வதில்லை, என்று இந்தப் பத்தினி, அந்த உத்தமனுக்குச் சத்தியம் செய்து தந்தாளாம். இதைத் தெரிந்தபிறகே, இப்படி ஒருநோட்டீஸ் போடவேண்டும் என்று கேட்போம், அப்போது இவளுடைய குட்டு தானாக வெளிப்பட்டு விடுகிறது, பார்ப்போம், என்று ஒரு யுக்திசெய்

தேன். நான் நினைத்தபடியே இருக்கிறது" என்று விஸ்தாரமாகக் கூறி முடித்தார். இளையபூபதிக்குக் கோபம் ஜுரவேகத்தில் ஏறிற்று. சகஜந்தானே. எனக்கும், கடுமையான கோபம். என் ஆத்திரத்தில் நான் கண்டபடி அக்காவைத் திட்டிவிட்டு, "யாருடையதயவிலே இப்போது நீ ஒரு 'மனுஷியாக' வாழ்கிறாயோ, அவருக்கே துரோகம் செய்து கொண்டிருக்கிறாய். உன் முகத்திலே விழிப்பதே பாபம். ரோஷமானமிருந்தால், அரை க்ஷணம், இங்கு இருக்கலாமா நீ. நீதான் மானங்கெட்டு, இங்கு இருந்தாலும், நான் எப்படி இருப்பேன்." என்று ஆவேசமாடினேன். அக்காவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. இப்போது எண்ணிக்கொண்டால் என்மனம் பதறுகிறது; ஆனால் அப்போது கண்ணீருக்குப் பதில் இரத்தமே வழிந்தாலும் சரி என்று எண்ணினேன்.

அக்கா அதிகமாகப் பேசவில்லை. "விமலா! என் வாழ்க்கையிலே, இப்படிப்பட்ட இடி விழுவது சகஜமாகிவிட்டது. ஒவ்வொருசமயமும், ஏதாவதொரு, சந்தேகம், என் மீது எழுகிறது. நான், கள்ளி என்றும் துரோகி என்றும் தூற்றப்படுகிறேன். வீணான பழிகளைச் சுமந்து திரிகிறேன், பூமிக்குப் பாரமாய். ஊரே என்னைக்கேவலமாகப் பேசினபோதும், ஜெமீன்தார் என்னைக் கொடுமை செய்தபோதும், என் மனம், இன்று அடைகிற அளவு வேதனை அடையவில்லை. உன்பேச்சுத்தான், என்னைச் சாகடிக்கும் கடைசி விஷச் சொட்டு. விமலா! என் மீது, பலமான பழியை ஐயர் சுமத்திவிட்டார். பாபம்! அவர் மீது தவறு இல்லை. அவருக்குக் கோபம் வந்ததும் சகஜம், என்மீது பழி தீர்த்துக் கொள்ளச் சமயம்பார்த்துக் கொண்டிருந்தார்—கிடைத்தது—ஜெயமடைந்தார். என் நேசத்தைப் பெறுவதற்கு அவர் செய்த முயற்சியில் ஜெயம் அடைந்திருந்தால், இப்போது அவர் என்னைக் கெடுக்க, இவ்வளவு பாடுபடவேண்டிய அவசியமே இராது"—என்று பேசிக் கொண்டே இருக்கையில், ஐயர், "சர்வேஸ்வரா! பெண்களுக்கு, இது சர்வசாதாரணமான ஆயுதமாகி விடுகிறதே, தங்கள் குற்றத்தை மறைக்க மிகச் சாமர்த்தியமாக, அவன் என்னைக்கெடுக்கப்பார்த்தான், நான் இணங்கவில்லை, ஆகவே என் மீது பழி சுமத்துகிறான்—என்று பேசிவிடுகிறார்கள். பெரும்பாலும், அறிவுத் தெளிவு இல்லாதவா நம்பவும் செய்கிறா! ஜெமீன்தாரவாள்! எனக்குக் கிஞ்சித்தேனும், அந்த மாதிரி சபலம் உண்டானது கிடையாது. வீண் பழி, அவ்வளவுதான் நான் சொல்லமுடியும்" என்று சற்றுச் சோகமாகக் கூறினார், இளையபூபதி, "இருக்கட்டுமே ஐயர்! நீ, என்ன இவளை இச்சித்தால் தவறா! இவள் என்ன மகாராணியோ!" என்று வெறுப்பும் அலட்சியமும் கலந்த குரலில் பேசினார். இந்தப் பேச்சுக்கு ஒரு பதிலும் தராமலேயே, அக்கா, தன் பேச்சைத் தொடங்கினாள்.

"விமலா! என் பழைய வாழ்வு பழாகிவிட்டபிறகு, உனக்கே தெரியும், நான் கூட்டம் அதிகம் சேருகிற கோயிலுக்குப் போவதில்லை என்பது. திரிபுரசுந்தரி கோயிலில் கூட்டம் வருவது கிடையாதல்லவா; அதனாலேதான் அங்கு சென்றேன்—நேற்றுத் தற்செயலாகத்தான் ஜெமீன்தாரரை அங்கு பார்த்தேன்—அவரும் அங்கு, எலக்ஷன் சம்பந்தமாகக் கோயிலில் அர்ச்சகரைக் காணவே வந்திருந்தார். நாங்கள் பேசினது உண்மை. நான் அவருக்குக் கெடுதி செய்வதில்லை, துரோகம் செய்வதில்லை, என்று சத்தியம் செய்து தந்ததும் உண்மை. கோயில் அர்ச்சகர், எங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தார். அவர் சொல்லித்தான் இவருக்கும் இந்த விஷயம் தெரிந்திருக்கும். ஆனால், நான் இளையபூபதிக்குத் துரோகம் செய்ய எண்ணினதுமில்லை, இந்த எலக்ஷன் விஷயமாக, இங்கு நடைபெறும் எந்த ஏற்பாட்டையும் நான் கவனித்ததுமில்லை, நான் என் கஷ்டகாலத்தை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், எனக்கு இதுதானம்மா வேலை, எலக்ஷன் இரகசியத்தை உளவறிந்து வெளியே கூற, எப்படியோ, ஐயருக்குச் சமயம் கிடைத்தது. உன் மனதிலே, என்னைப்பற்றி எவ்வளவு கேவலமாக எண்ணிக் கொண்டிருக்கிறாய் என்பதும் தெரிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. துரோகி என்று, எப்போது என்மீது உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டதோ, இனி, இங்கு நான் இருக்கக்கூடாது. நீங்கள் நிம்மதியாக வாழ்வது, என்னால் கெடுவானேன். நான் போகிறேன்—உலகம் ரொம்பப் பெரியது அம்மா—அனாதைகள் கூடப் பிழைக்கிறார்கள்—அதுவும் முடியாவிட்டால், ஆழமான ஆறு கிணறு குளம் ஏராளம்." என்று கூறிவிட்டு, வீட்டை விட்டுச் சென்றாள்.

அம்மா, இப்படியும்பேச முடியாமல் அப்படியும் பேச முடியாமல் திணறினார்கள். சில நாட்களுக்குப் பிறகு, அக்கா, தானாக வந்துவிடுவாள் என்றுதான் நான் எண்ணிக் கொண்டிருந்தேன். எங்களுக்குத் தூரபந்து ஒருவள்—அவள் வீட்டிலே—பக்கத்து ஊர்—அக்கா தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். எலக்ஷன் முடிந்தபிறகு, நாமே நேரில்போய், ஏதோ இரண்டு சமாதானம் கூறி அழைத்துக் கொண்டு வரலாம் என்று தைரியமாகத்தான் இருந்தேன்.

எலக்ஷன் வேலையோ மும்முரமாகிவிட்டது. நாள் நெருங்க நெருங்க, செலவு அதிகரித்தது.

"குன்றாராருடைய, தேசபக்தியைப் பாருங்கள்—ஒரு பைசாக் கூட உங்களுக்குச் செலவு வைக்கமாட்டேன். என்பணமேதான் செலவிடுவேன். இது தேச சேவைக்கான காரியமல்லவா? இதற்குச் செலவாகாத பணம், வேறு எதற்கு? என்று பேசுகிறார்"—என்று எலக்ஷனுக்குப் பத்து நாட்களுக்கு முன்பு புகழ்ந்து பேசினவரைப் பற்றி, எலக்ஷன் நாலு நாட்கள் இருக்கும்போது, "குன்றாரார் விஷயம் கொஞ்சம் சந்தேகமாயிட்டுது. அவருடைய மருமகன், எதிர்க் கட்சிக்கு வேண்டியவனாம். மருமகனுக்கு விரோதமாகப் போக முடியாதென்று பேசுகிறார். மேலும், கொஞ்சம், பணத்தையும் தெளித்துவிட்டிருப்பார்கள் போலிருக்கிறது. வேறு யோசனை செய்து பயனில்லை என்று, ஒரு இருபது பச்சை நோட்டு குன்றாரரிடமும், ஒரு பத்து, மருமகனிடமும் தள்ளி, பாண்டுரங்க ஸ்வாமி கோயிலிலே, கொண்டுபோய், சத்யம் வாங்கிவிட்டேன்" என்று பேசினர்!

"ஆறும் நாலும் பத்து—சாத்தூர் வட்டத்திலே பத்தாயிரம் ஓட்டு நமக்குத்தான், சந்தேகமே வேண்டாம்" என்ற தைரியமான பேச்சு எலக்ஷனுக்கு நாலு நாட்களுக்கு முன்புவரையில் இருந்தது, பிறகோ, "ஆறிலே ஒரு இரண்டு உதைத்துக் கொள்ளும் போலிருக்கு-நாலுன்னு

போட்டகணக்குச்சரிப்பட்டுவாராது, அங்கே 'ஒண்ணு' தேறுவதே கஷ்டம்" என்று பேச்சுமாறி, ஒருநாலு ஆயிரத்தைச் செலவிட்டால்தான் முதலில்போட்ட 'புள்ளி' சயின்படி நடக்கும் என்று பேசினர். பலவழிகளிலும் செலவுதான் — தொல்லைதான்-இவ்வளவும் போதாதென்று, எலக்ஷனுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கூட்டத்திலே ஒரு பிரசங்கி, இளையபூபதிக்கு, 'எக்கச்சக்கமான' நிலைமையை ஏற்படுத்திவிட்டான். அவன் காங்கிரஸிலேயே, என்னமோ தீவிரவாதியாம்! ஜனங்களுடைய மனதிலே உற்சாகமூட்டக் கூடிய பெரிய பிரசங்கி என்று சொல்லி, தந்திமேல் தந்தி அடித்து, வரவழைத்தார்கள். அவன்,வந்தபோதே,ஒருமாதிரியான ஆசாமி என்று எனக்குப்பட்டது. எத்தனையோ பிரசங்கிகள் அதுவரையில் வந்திருக்கிறார்கள்-எல்லோரும் நேரே என் வீட்டிற்குத்தான் வருவார்கள்; ஸ்டேஷனுக்கு ஐயர் போவார், அழைத்து வருவார். இதுதான் வாடிக்கையாக நடந்துவந்தது. இந்தப் பிரசங்கியை அழைத்துவர ஸ்டேஷன் சென்றிருந்த ஐயர், தனியாகவீடுவந்தார். "ஏன்ய்யா! ஆசாமி, வரவில்லையோ?" என்று இளையபூபதி கேட்டார். ஐயர், புன்சிரிப்புடன், ஆனால் குறும்புத்தனமாக, "வந்துவிட்டார். காங்கிரஸ் ஆபீசிலேயே தங்குவதாகச் சொல்லிவிட்டார்" என்றார். எனக்குக் கோபம், இளைய பூபதி, "கிராக்கா அந்த ஆசாமி" என்று கேலியாகக் கேட்டார். "நமக்கு எப்படியிருந்தால் என்ன! காரியம் ஆகவேண்டும்." என்றுகூறிவிட்டு, "பாரதப்பிரசங்கி பார்த்தசாரதி ஐயங்காரும் வந்திருக்கிறார்—அவரையும் இன்று, நம்ம கூட்டத்திலே பேசச் சொல்லியிருக்கிறேன்" என்றார்.

அன்று மாலைக் கூட்டம், அமளியில் முடியாதது, எங்களிடம் ஆள் அம்பு ஏராளமாக இருந்ததால்தான். எலக்ஷன் பிரச்சாரக் கூட்டம் கடைசியில் தர்க்கமாக முடிந்தது—தலை உருளுமோ என்று நாங்களெல்லாம் பயப்படும்படியாகிவிட்டது.

தேசியப் பாட்டுகள் பாடி, தலைமை வகித்த கதர்க்கடை மானேஜர், பேசியான பிறகு, முதலிலே, பாரதப் பிரசங்கி பார்த்தசாரதி ஐயங்காரைப் பேசச்சொன்னார்கள்! அவரும், ஆனந்தமாக ஒப்புக்கொண்டார். அவர் பேச எழுந்ததுமே, புதிய பிரசங்கிக்கு, அவர் பெயரைச் சொல்லவே இல்லையே, முத்துராமலங்கமாம், முகம் கடுகடுத்தது. தக்ளியை எடுத்துச் சுற்றிக்கொண்டிருந்தார். பாரதப் பிரசங்கி, இதைக்கண்டு, எப்படி ரசிக்க முடியும். ஆணும் பெண்ணுமாக, அர்த்த ராத்திரியில் ஆயிரக்கணக்கானவர்கள் கூடி, அவருடைய பாரதப் பிரசங்கத்தைக் கேட்பது வழக்கமாம். அப்படிப்பட்டவருடைய பிரசங்கத்தை அலட்சியமாகக் கருதி, முத்துராமலிங்கர், தக்ளியை எடுத்ததும், ஐயங்காருக்கு, கோபம் பிறந்தது. கிண்டலாகப் பேச ஆரம்பித்தார்! பகவான் கிருஷ்ண பரமாத்மாவின் கையிலே பாஞ்ச சன்யம் என்னும் சங்கு இருந்ததல்லவா, அதுபோல, நமது இளம்பிரசங்கியார் கரத்திலே, 'தக்ளி' இருக்கிறது! என்றார். ஜனங்கள், கை கொட்டிச் சிரித்தனர். அந்தப் பிரசங்கியோ, கோபிக்கவுமில்லை, வெட்கப்படவுமில்லை, தக்ளியை எடுத்து மறைத்துவிடவுமில்லை, சாவதானமாக நூற்றுக் கொண்டிருந்தார்.

பாரதப் பிரசங்கி, பாரதத்தையே சொல்லிவிடுவார் போலிருந்தது—எலக்ஷனை மறந்து, துரோபதை துயிலுரிந்தது, அரக்குமாளிகைகட்டியது, சகுனியின் சாகசம், முதலியவற்றைப் பற்றி விஸ்தாரமாகப் பேசினார். இடையிடையே, இனி நமது இளையபூபதி அவர்கள் எலக்ஷனுக்கு நின்றிருக்கும் விஷயமாகச் சில வார்த்தைகள் பேசுகிறேன்—என்று கூறுவார்—ஆனால் பழையபடி, பாரதமேதான் பேசுவார். எலக்ஷன் சமயமல்லவா! எதிர்க்கட்சிக் கூட்டத்திலே பேசினதற்கு, என்ன பதில் கூறுகிறார்கள், பார்ப்போம், என்று ஆவலோடு வந்திருந்தனர் ஏராளமானவர்கள். அவர்களிடம், அர்ஜுனன் தவம், சகாதேவன் பதிகம், என்று இப்படியே பேசினால், எப்படிப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்க முடியும். ஜனங்கள், கனைத்தும், இருமியும், கை தட்டியும், பிரசங்கத்தை முடித்துக் கொள்ளும்படி ஜாடை காட்டினார்கள். பாரதப் பிரசங்கி இந்தச் சூட்சமத்தைப் புரிந்துகொள்ளவே கொஞ்சம் நேரம் பிடித்தது. கடைசியில், இனி முடியாது என்று கண்டு கொண்டு, பிரசங்கத்தை முடிக்கத் தொடங்கி, "மகா ஜனங்களே! புண்ய பூமியாம் நமது பாரத பூமியில், பண்டைய நாட்களிலே இருந்து வந்த தானம் தர்மம், யோகம் யாகம், தவம் ஜெபம், ஆலயம் அபிஷேகம், சனாதனம் சாத்வீகம், முதலான சிறந்த முறைகள், கேவலம், நீசாளாகிய, வெள்ளைக்காராள் இங்கே வந்ததால், நாசமாகி ஜன சமூகத்திலே, நவநாகரீகம் எனும் மோகம் புகுந்து, பக்திமார்க்கம் பாழாகி, ஆச்சாரம் அழிந்து, மதாச்சாரம் சதாச்சாரம் யாவும் கெட்டு, வர்ணாஸ்ரமத்தையே கைவிட்டு, மக்கள், நீ என்ன உயர்வு? நான் என்ன மட்டம்? என்று பேசும் அளவுக்கு, நாஸ்தீகர்களாகவுமாகிவிட்டனர். நாட்டுக்குச் சுயராஜ்யம் வந்தால், இந்த சர்வநாசத்திலிருந்து நாம் தப்ப முடியும். நமது பூர்வீகப் பெருமையை,மறுபடியும்நிலைநாட்டி, மதம் கெடாமலும், ஜாதி ஆச்சாரம் பாழாகாமலும் பார்த்துக்கொள்ளலாம். பசுவும் புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடித்தது, இந்தப் பாரத பூமியிலேதான்! பத்தினியிடம் யமதர்மனேதோற்றது, இந்தப் பாரத பூமியில்தான்! நாலுவேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்தெட்டுக் கலைஞானம் இருப்பது, இந்தப் பாரத பூமியில்தான்!—என்று, பஜனையே பாடத் தொடங்கினார். பலமான, கை தட்டுதலுக்குப் பிறகு, பிரசங்கியைத் தலைவர் வற்புறுத்தி உட்காரவைத்து விட்டு, முத்துராமலிங்கனாரைப் பேசச் சொன்னார். ஆரம்பமே, வேகமாக இருந்தது.

"மகாஜனங்களே! நான் பாரதப் பிரசங்கியல்ல—பாரத மாதாவின் சேவகன்!"என்றுகூறினார்—உடனே மக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். பாரதப் பிரசங்கியின் முகத்திலே அசடு தட்ட ஆரம்பித்தது.

"பாரதக் கதையைக் கூறி, அதிலே இருந்து, பல உதாரணங்களைக் காட்டி, ஐயங்கார் பேசினார்—நான் அப்படிச் செய்யப்போவதில்லை—பாரதம் தெரியாததால் அல்ல—இந்தக் காலத்துக்குப் பாரதம் தேவையில்லை ஆதலால்."

மீண்டும் சந்தோஷ ஆரவாரம் கிளம்பிற்று.

"பாரதத்தை மறந்துவிடுங்கள். பாரதம், குடும்பச் சண்டை. அது கூடவே கூடாது. பாண்டவரும் கௌரவரும் சண்டையிட்டு, பாரத நாட்டைப் படுகளமாக்கினர். குரு

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 30—5—48 [ஞாயிறு

# டேனிஷ் பால்காவடி!

✲

"துஷ்டா! ஒருவேலை வெட்டிக்கும் லாயக்கில்லாமல் இப்படி ஊர் சுற்றிக்கொண்டு திரிகிறாயே! நீ, எப்படித்தான் பிழைக்கப் போகிறாயோ?—என்று வெள்ளையர் நாட்டுத் தாய்மார்கள் கவலைப்பட்டபோது, "துஷ்டப் பிள்ளைகள்," "ஓ! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே! நான் இந்தியாவுக்குப் போகிறேன். பார்! ஒரு பத்து வருஷத்தில், பெரும்பணத்தோடு, வீடு திரும்புகிறேன்," என்று கூறுவராம்! அதுபோலவே, அவர்களால் செய்யவும் முடிந்தது. ஏனெனில் இங்கு இயற்கைச் செல்வத்தைப் பாழாக்கிக் கொண்டும், இகத்தைவிடப் பரமே மேல் என்று பேசிக்கொண்டும் உள்ள மக்கள் இருந்தனர்—அதனால், வெள்ளையர் நாட்டிலிருந்து இங்குவந்த 'வெடுவெட்டி'களால்கூட, வியாபாரக் கோமான்களாக, தொழில் நிபுணர்களாக முடிந்தது. கிளைவ், போதும், உதாரணத்துக்கு.

பதினைந்தாம் பதினாறும் நூற்றாண்டுகளில், பிரிட்டிஷார் மட்டுமல்ல, ஐரோப்பா கண்டத்து, பல நாட்டவரும், கலம் ஏறி, இந்தியா வந்து சேர்ந்தவண்ணம் இருந்தனர்—இங்கு வியாபாரம், தொழில் செய்தனர்! சொந்த நாட்டை அன்னியனுக்கு வேட்டைக் காடாக்கிவிட்டு, இங்குள்ளவர்கள், அவர்களிடம் 'துபாஷ்' வேலை பார்த்தனர்!!

அப்படி வந்த பல நாட்டு மக்களிலே, டேனிஷ் நாட்டவரும் உண்டு. அவர்களுக்கும், இங்கு, கோட்டை கொத்தளங்கள் இருந்தன!

இப்போதும் காணலாம், பொறையாறு எனும் கடலோர நகரில், டேனிஷ் கோட்டையை.

அந்தக் காலத்திலேதான், நாட்டிலே சுயாட்சி கெட்டு, மக்கள் பிளவுபட்டுப் போயிருந்தனர், அதனால் அன்னியர் புகவும், வியாபாரத்தையும் தொழிலையும் கைப்பற்றவும், பிறகு அரசியல் ஆதிக்கம் செலுத்தவும் முடிந்தது; இப்போதுமா அதே நிலை? இல்லையே! ஆனால் வெளிநாட்டார், இங்கு, மோப்பம் பிடித்துக்கொண்டு வந்த வண்ணந்தான் உள்ளனர்.

அவர்கள் 15, 16,ம் நூற்றாண்டுகளிலே, வந்தபோது, இங்கு அதுபோது ஆண்டுகொண்டிருந்த, மன்னர்களிடம் மண்டியிட்டும், மயக்கியும், வியாபாரம் செய்யும் சலுகையும், வியாபாரப் பாதுகாப்புக்காக, படை அமைத்துக் கொண்டு, கோட்டை கட்டிக்கொண்டு, கொடிமரம் நாட்டிக்கொண்டு, தனியாக வாழும் உரிமையும் பெற்றது போலவே, இப்போது ஆளும் அந்தஸ்த்துப் பெற்றுள்ளவர்களிடம் அந்தரங்கமாகக் கலந்து பேசி, இங்கு தொழில் நடத்திக்கொள்ளவும், வியாபாரம் செய்யவும், வசதிகள், கேட்கின்றனர், பெறுகின்றனர்.

பசு, இங்கு தெய்வம்! — சாஸ்திரம் இருக்கிறது, பண்டிதர்களைக் கேட்டால் கூறுவர். பசுவைக் கொல்வது மகாபாபம்—அதுவும் சாஸ்திரம்! கோ ரட்சக சபை இருக்கிறது; அதற்குக் கோடீஸ்வாரின் ஆதரவு இருக்கிறது. புராணப் பித்தர்களைக் கேட்டால், பூரிப்புடன் கூறுவர், மாயோன் மாடு மேய்த்தான்! என்ன அதன் பொருள்! கால்நடைகளை அவ்வளவு உயர்வாக நம் நாட்டவர் மதித்தனர் என்று பொருள்—என்பதாக வியாக்யானம் கூறுவர்.

அப்படிப்பட்ட நாட்டிலே, ஒரு முதல்தரமான, விஞ்ஞான ரீதியான, இலாபந் தரத்தக்க முறையிலே, ஒரு பால்பண்ணை நடத்த முடியாதா?

இதோ ஒரு சேதி—மே 19, மெயில் பத்திரிகையில் காணலாம்.

விவசாய மந்திரி, மாதவமேனனையும், தொழில் மந்திரி, சீதாராம ரெட்டியாரையும் நீலகிரியில், டேனிஷ் நாட்டைச் சேர்ந்த, இரண்டு, பால்பண்ணைத் தொழில் நிபுணர்கள் பேட்டி கண்டனர்.

எங்களுக்கு, மேய்ச்சல் நிலம், போதுமான அளவில் தரமுடியுமா? தந்தால், நாங்கள், எங்கள் டேனிஷ் நாட்டுப் பசுக்களை இங்கு கொண்டு வந்து, பால்பண்ணை நடத்துகிறோம்—முதல்தரமான பண்ணை—நவீன விஞ்ஞான முறைகளுடன் கூடியது—என்று கேட்டனராம், அமைச்சர்களை.

விவசாய மந்திரி, "எத்தனை பசுக்களைக் கொண்டு வரமுடியும்?" என்று கேட்டாராம். அதற்கு அவர்கள் மேய்ச்சலுக்கு உபயோகமாகும் நிலம், எவ்வளவு அதிகமாகத் தருகிறீர்களோ, அதற்கேற்ற அளவு, பசுக்களைக் கொண்டு வருவோம்" என்றனராம்.

"சரி! நீங்கள், இங்குள்ள அதிகாரிகளின் உதவியைக் கொண்டு, நிலத்தைப் பாருங்கள்—வசதியானதாக இருப்பின் கூறுங்கள்" என்றாராம் அமைச்சர்.

ஒரு அதிகாரி—அவருக்கு உள்ளூர இந்தத் திட்டம் பிடிக்கவில்லையோ என்னவோ — இங்குள்ள பருவ நிலை, டேனிஷ்நாட்டுப்பசுக்களுக்கு உகந்ததாக இராதே, என்றாராம். டேனிஷ் நாட்டு ஜாகாப்சன் என்பவர், இதிலே ஏமாறவில்லை. நீலகிரி ஜில்லா சீதோஷ்ண நிலைமை, டேனிஷ் நாட்டிலே இருப்பதுபோலவே இருக்கிறது. ஆகையினாலே, அது விஷயத்திலே தொந்தரவு இராது, என்றாராம்.

பால்பண்ணையை முதலில் நீலகிரி வட்டாரத்தில் அமைத்துவிட்டு, பிறகு, மற்றப் பகுதிகளில் அமைக்கவும், டேனிஷ் பசுக்களையும் உள்நாட்டுக் கால்நடைகளையும், 'கலப்பு மணம்' செய்வித்து, கால்நடையை வளமாக்கவும், டேனிஷ் நாட்டு நிபுணர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

அமைச்சர்களைக் கேட்கிறோம், இந்தச் சிறுதொழிலைக்கூட நாம், சொந்தத்திலே செய்யக்கூடாதா—முடியாதா? பால்பண்ணைத் தொழிலுக்கு, டேனிஷ் நாட்டவருக்கு இடமளிப்பது! பிஸ்கட் தொழிலுக்கு, பிரிட்டிஷ் முதலாளிக்கு வசதி தருவது! சிகரட்டுக்கு, மோட்டாருக்கு, அமெரிக்கருக்கு உரிமை தருவது! வந்து கேட்கும் வெளிநாட்டானுக்கெல்லாம், மேய்ச்சல் இடமும், தொழில் உரிமையும் தருவது, என்று நிலைமை இருந்தால், அதற்கு, நாடாள நீங்கள் வந்திருக்கவே, வேண்டாமே!

பால் டப்பாக்கள் — வெண்ணெய்ப் பொருள்கள் — முன்பு, டேனிஷ் நாட்டுக் கம்பெனிகள், இங்கு அனுப்பும்.

அன்னிய நாட்டுச் சரக்கை

வாங்கி, நமது பணத்தைப் பாழாக்கிக் கொள்கிறோம்—நமது நாட்டுத் தொழில் நாசமாகிறது — என்று பேசிப் பேசி, அன்னிய நாட்டவரை ஏசி ஏசி, மக்கள் மனதிலே, மஞ்சள் நிறத்தைப் பூசி, மந்திரிகளானீர்கள்! இப்போது அன்னிய நாட்டானையே இங்கு, தொழில் நடத்த அனுமதிக்கிறீர்கள்? இது என்ன நியாயம்?

ஒரு சர்க்காருக்கு, இரண்டு மூன்று, வெளிநாட்டு நிபுணர்களை, வேலைக்கு அமர்த்தி, தொழிலை, நடத்தத் திறமையும், வசதியும் இல்லையா?

அல்லது டேனிஷ் நாட்டு பசுக்களை வாங்குவதற்குப் பணமும் பக்குவமும் இலலையா?

அல்லது இங்கிருந்து சில இளைஞர்களை டேனிஷ் நாட்டுக்கு அனுப்பி, அந்தத் தொழில் நுணுக்கங்களைக் கற்றுவரச் செய்ய முடியாதா?

டேனிஷ் நாட்டு நிபுணர்கள், தைரியமாக, இடம் கேட்கிறார்கள், நீங்களும், ஆகட்டும் என்று கூறுகிறீர்களே! இப்படி வெளிநாட்டாருக்கு மேய்ச்சல் இடம் கொடுத்துவிட்டால், இங்கு, தொழில் வளருவது, செல்வம் கொழிப்பது, எவ்விதம், எப்போது! உங்களைப் போன்றவர்கள் ஊராளும் நிலை பெற்றது இதற்குத்தானா!

சென்னையின் முன்னாள் மேயர் ராதாகிருஷ்ணன் பலமுறை எடுத்தெடுத்துச் சொன்னார், பால்பண்ணை தேவை, தேவை என்று.

டேனிஷ் நாட்டவருக் கல்லவா, அமைச்சர்கள், அனுமதி தருகிறேன் என்கிறார்கள்.

அன்னியக் கம்பெனிகளிடமிருந்து, சரக்குகளைத் தருவித்து, நமது பொருளையும் தொழிலையும் இழப்பது எவ்வளவு கேடு பயப்பதோ, அதுபோன்றது தானே, அன்னியர்களை இங்கே தொழில் நடத்தவே அனுமதிப்பது.

அதைவிட, ஒருவிதத்திலே, இந்த முறை அதிகமான கேடு தருமே. வெளிநாட்டிலிருந்து சரக்கு வரும்போதாவது, அன்னிய நாட்டுச் சரக்கு, என்று தோன்றும்; அவர்கள் இங்கேயே தொழில் நடத்தினால், பொதுமக்களுக்கு, இது அன்னிய நாட்டவருடையது என்று கூடத் தெரியாதே! அதிலும் வியாபார தந்திரம் தெரிந்த ஒரு சேட்டோ, மார்வாடியோ, அதற்கு சோல் ஏஜண்டாகி, வெண்ணெய் தின்னும் பாலகிருஷ்ணன் படத்தை லேபிலாகப் போட்டுவிட்டால், டேனிஷ் தொழில் என்பதேகூட மறந்து போகுமே!

பொதுமக்களுக்கு எங்கே புலனாகிறது, இந்தப் புதிய ஏகாதிபத்யம் சிருஷ்டிக்கப்பட்டு வரும் சூட்சமம்! அவர்கள்தான் இன்னமும், பாலாபிஷேகத்திலும், பாற்காவடியிலும், கருத்தைச் செலுத்துகிறார்களே! அவர்கள், பால்காவடி தூக்கித் தூக்கிப் பாழாகிறார்கள். பிழைக்கத் தெரிந்த டேனிஷ் நாட்டவர், பாற்காவடி தூக்குகிறார்கள், தொழிலைப் பிடிக்க!

✻

# பழங்கதை பேசிப்பயனில்லை

✻

14, 15-5-48 தேதிகளில் நாகர்கோயிலில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டின் வரவேற்பாளர் கவிமணி—தேசிக விநாயகம் அவர்கள் பேசும்போது, எழுத்தாளர் கடமை பற்றிக் குறிப்பிட்ட பகுதியைக் கீழே தருகிறோம்:—

"நான் எழுத்தாளர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன் தமிழில் அது இருந்தது; இது இருந்தது என்று பழம் பெருமையோடு பேசிக்கொண்டிருக்காமல், எது தேவையோ அத்துறையில் இறங்கி அவர்கள் உழைக்கவேண்டும். முத்தமிழ் முத்தமிழ் என்று முழக்கம் செய்கிறார்கள். இசைத்தமிழில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? பண்டைநூல்களைப் படித்துவிட்டு நாம் 'பெருநாரை' 'பெருங்குருகு' என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தால் இசை ஞானம் உண்டாகிவிடுமா? அந்த நாரைகளும், குருகுகளும் மறைந்துபோய்விட்டன. இனி நம்முடைய வலைக்குள் அகப்படப் போவதில்லை. ஒரு ஏழை உண்ணச்சோறும் உடுக்கத் துணியுமில்லாமல் தவிக்கிறான். அவனிடத்தில் அவனுடைய பாட்டனும், கொட்பாட்டனும் பெரிய கப்பலோட்டி வியாபாரிகளாயிருந்தார்கள் என்று பழம் புராணம் படிப்பதனால் என்ன பயன்?

சில தமிழர்களிடம் இதைப்பற்றிப்பேசினால் தமிழிலிருந்த இசைத்தமிழ் நாடகத் தமிழ்நூற்கள் கொஞ்சமா; அவையெல்லாம் கபடாபுரத்தைக் கடல் கொண்டதோடு போய்விட்டன, என்றுசொல்லி நம்வாயை அடைத்துவிடுகிறார்கள். போய்விட்டன, போய்விட்டன என்று சொல்லிக் கரையிலிருந்து அலையை எண்ணிக்கொண்டிருந்தால், அலை வந்து கரை ஏறுமா? புதுநூல்கள் ஆக்குவதுதானே செய்யத்தக்க முயற்சி. தமிழில் நாடகங்கள் அதிகமாக இல்லை. இசையைப் பற்றி வடமொழி தெலுங்கு முதலியவற்றில் இருப்பதுபோன்ற நூல்கள் தமிழில் உண்டா? தற்காலத்தில் சில அறிஞர்கள் நாடகங்கள் எழுதி வெளியிடத் தொடங்கியிருக்கின்றனர். அவர்களுடைய முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியது. செந்தமிழ்ச் செல்வி, பல காளிதாசர்களையும், ஷேக்ஸ்பியர்களையும் இப்ஸன்களையும் பிறப்பித்து உதவுவாளாக.

காலேஜ்களில் கற்பிப்பதற்கேற்ற சரித்திர நூல்கள் விஞ்ஞான நூல்கள் முதலியவை தமிழில் இல்லை. அவை பல எழுதப்படவேண்டும். இந்த விதமான நூல்கள் பலவும் வெளிவந்த பிறகு 'கலைக்களஞ்சியம்' எழுதுவதுதான் சௌகரியமாயிருக்கும் என்பது எனது அபிப்பிராயம். உஸ்மானியா பல்கலைக் கழகத்தார் ஏறக்குறைய 30 வருஷங்களுக்கு முன்னமேயே உயர்தரக் கல்விக்கு வேண்டிய அனேக சாஸ்திரங்களை உர்துவில் மொழி பெயர்க்கத் தொடங்கிவிட்டனர். இப்பொழுது அவர்களுக்கு அந்த விஷயத்தில் நமக்கு இருப்பதுபோன்ற கஷ்டங்கள் ஒன்றுமில்லை. ஆதலால் நாம் முதனூல்கள்எழுதுவதோடு,மொழி பெயர்ப்பும் செய்யவேண்டியதுமிக்க அவசியமாகும். இங்ஙனம் தமிழ் வளத்தைப் பெருக்கவேண்டுவது எழுத்தாளர் கடன்.

எழுத்தாளர்க்குப் பல குறைகள் இருக்கின்றன. அவர்களுக்குப் போதுமான ஊதியம் கிடைப்பதில்லை. அவர்கள் மனத் திருப்தி உடையவர்களாக இருந்தால்தான் ஊக்கமாக உழைப்பார்கள்: பயன் தரும் காரியங்களைச் செய்வார்கள்."

# 15—கோடி பாழ்!

"மாமரம் ஏறி, உச்சிக்கிளைக்கருகே இருந்த பழத்தைப் பறித்துக் கொண்டு வந்தேன். சிரமம் அதிகம்—ஆபத்தும் அதிகம். அதைப்பற்றிக் கவலைப் படாமலும், பயப்படாமலும், பழத்தை எப்படியோ கொண்டு வந்துவிட்டேன்" என்று பெருமையுடன் கூறிக்கொண்டே, வில்வக் காய்களைக்கொடுத்தான், வீராசாமி!

அடமுட்டாளே! என்னடா இது, வில்வக்காயைத் தருகிறாயே!—என்று முனுசாமி கோபத்துடன் கேட்ட பிறகுதான், வீராசாமிக்கே விளங்கிற்று, தான் பறித்தது மாம்பழமல்ல என்பது.

"அடடா! என்னசெய்வது. நான் மாமரம் என்றெண்ணிக்கொண்டு தான், சிரமத்தைக் கவனியாமல் ஏறித்தொலைத்தேன் — பறித்தும் தொலைத்தேன். இப்போதல்லவா தெரிகிறது, மாம்பழமல்ல என்பது. என்ன செய்வது? கிடைத்தது அவ்வளவு தான்" என்றான் வீராசாமி.

வீராசாமியும் முனுசாமியும், சிறுவர்கள்—விளையாட்டுப் பருவம்; வேடிக்கைக்கேகூட அவ்விதம் செய்திருக்கலாம்!

நாட்டை ஆளும் மந்திரிகள், இந்த முறையில் நடக்கலாமா?

"பதினைந்து கோடி ரூபாய் செலவிட்டு, ஆஸ்திரேலியாவிலிருந்து, உணவுப் பொருளை வரவழைத்தோம். வந்த பிறகு பார்த்தால், அவை, கெட்டுப்போன பண்டமாயிருந்தன! என்ன செய்வது? ஆஸ்திரேலியாவுக்கு எழுதியிருக்கிறோம்—இது சரியல்ல, முறையல்ல—எங்களுக்கு நஷ்டஈடு கொடுத்தாக வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். கிடைக்குமோ கிடைக்காதோ தெரியவில்லை. எப்படி இருந்தாலும், கெட்டுப்போயுள்ள அந்த உணவுப்பொருளை, நாம், ஏற்றுக் கொள்ளவேண்டியே நேரிடுகிறது" என்று இந்திய சர்க்காரின் உணவு மந்திரி, ஜெயராம்தாஸ் தௌலத்ராம் சென்னையில் மே 21ந் தேதி பேசியிருக்கிறார், பிரமுகர்கள் முன்னிலையில்.

எப்படி இருக்கிறது நியாயம்! எப்படி இருக்கிறது திறமை!

பதினைந்துகோடி ரூபாய் செலவு! பஞ்சமான இந்தக்காலத்தில், இவ்வளவு பணம் செலவழித்துப் பெற்றதோ, கெட்டுப்போன பண்டம்! இதற்குத்தானா, இவ்வளவு "கெட்டிக்கார" மந்திரிகள், இருக்கிறார்கள்—அவர்களின்புகழை எட்டுத்திக்கிலும் முரசு வேறு கொட்டுகிறார்கள்!

பதினைந்துகோடி ரூபாய் பாழானதை, கொஞ்சம்கூடப் பதறாமல், கூறுகிறார். நஷ்டஈடு கேட்டிருக்கிறோம், கிடைத்திடுமோ இல்லையோ, என்று கூறுகிறார்! பொதுமக்களிடமிருந்து, வசூலிக்கப்படும் பணம், இப்படிப் பாழாகிறது—பொறுப்புணர்ச்சி பற்றிய கவலையற்றுப்பேசுகிறார் அமைச்சர்!

"நல்லதானியமாகத்தான் அனுப்புவார்கள் என்று நம்பினோம்—பெரும் பணமும் செலவிட்டோம்—பார்க்கப் போனால், கெட்டுப்போன தானியத்தைத்தான் அனுப்பிஇருக்கிறார்கள்" என்று கூறியபோது, தௌலத்ராமுக்கு, பொதுமக்கள் மனம் இதைக் கேள்விப்பட்டால் பதறாதா, கோபிக்கமாட்டார்களா, என்பது பற்றிய அச்சம் வராததற்குக் காரணம், தானியத்தில் மட்டுமல்ல, இந்த மந்திரிமார்கள் விஷயத்திலேகூட, மக்கள், நல்ல திறமையுள்ளவர்கள், தேர்தலின் போது கொடுத்த வாக்கைக் காப்பாற்றுபவர்களாகத் தான் வந்து சேருவார்கள் என்று நம்பினர், எதிர்ப்பார்த்தனர்—கிடைத்த மந்திரிகளோ, கிழக்கை மேற்காகவும், வடக்கைத் தெற்காகவும் எண்ணிக்கொண்டு, வம்புகளை விலைபேசிவாங்கிக்கொண்டு, அடக்குமுறைக்கு வரை முறையின்றித் தூபம் போடுபவர்களாகத்தானே கிடைத்தனர்—என்ன செய்துவிட்டனர் மக்கள்?—என்ன செய்ய முடிந்தது?—திரைத்தனத்தை நடத்துவதற்கு வந்தவர்கள் விஷயமே இப்படியானபோது, தானியம் கெட்டுப் போயிற்று என்றால், என்ன செய்துவிடப் போகிறார்கள்—என்ற நம்பிக்கைதான்!

நல்லதாக அனுப்புவார்கள் என்று எதிர்ப்பார்த்தனராம்! இதிலே ஆருடம் தேவையா?

ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய சர்க்காரின் பிரதிநிதி, ஏன், இதனைச் சரியாகக் கவனித்திருக்கக் கூடாது! அதைவிட வேறு என்ன வேலையாம் அங்கே அவருக்கு?

இவ்வளவு பெருந்தொகையைச் செலவிட்டுத் தானியம் வாங்கும் போது இந்தக் காரியத்தையே, உடனிருந்து கவனிக்க, விஷயமறிந்த, ஒரு தனி அதிகாரியையே அனுப்பி இருக்கலாமே!

பொதுமக்களின் பணம் பாழாகக் கூடாது, மனம் நோகக்கூடாது, என்பதிலே அக்கரை இருந்திருக்குமானால், இப்படியா, தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டிருப்பார்கள். பதினைந்துகோடி! பட்டினியிலிருந்து தப்புவதற்காக, மக்கள், வெளிநாட்டுக்கு அதிகப்பணம் கொடுத்து, உணவுப்பொருள் கேட்டுப் பெறும், இந்தக் கேவலத்தினூடே, இது ஒரு வேதனை!

ஏன், இவ்வளவு பொறுப்பற்று நடந்துகொள்கிறார்கள், அமைச்சர்கள்? கேட்பார் யார்? கேட்டால் வாய்ப்பூட்டு! எழுதினால், பத்திரிகையைத் தடைசெய்! சிறையிலே பிடித்துத்தள்ளு!

இந்த அடக்குமுறைக்கு, என்னென்ன புதுப்புது மெருகு கண்டுபிடிக்கலாம் என்பதிலே கவனம் செலுத்துவதற்குத் தான் நேரம் இருக்கிறதே ஒழிய, உணவுப் பொருளை வெளியிலிருந்து தருவிப்பதைக்கவனித்து, கெட்டுப்போகாததாகத் தருவிப்போம், அதற்கென்ன வழி என்பதுபற்றி யோசிக்க நேரம் ஏது அவர்களுக்கு!

கெட்டுப்போன தானியத்துக்கு, பதினைந்துகோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, வெட்கமோ துக்கமோ, கூச்சமோ இன்றி, அமைச்சர் நல்லது கேட்டோம், கெட்டது கிடைத்தது! கிடைத்ததைக் கொள்வோம்; வேறென்ன செய்வோம்! என்று பேசுகிறார்.

## "இந்தி" வந்துவிட்டது

"ஆறும் வகுப்பிலிருந்து இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. தாய் மொழியைச் சரிவரப் புரிந்துகொள்ளாத நிலையில் அன்று ஆங்கிலம் வற்புறுத்தப்பட்டது. இன்று ஆங்கிலமும் இந்தியும் வற்புறுத்தப்படுகின்றன. 'ஆங்கிலம்' வேண்டியதுதான். இலக்கியவளமிலா, விஞ்ஞான நூல் இலா இந்தி எதற்காக? இந்திய நாட்டுஅரசாங்கத்தில்'உத்தியோகம்' பெற்றுப் பொருள் திரட்ட, தமிழனாய்ப் பிறந்த அனைவரும் இந்திய நாட்டு அரசியலில் "உத்தியோகம்" தேடப்போகின்றார்களா? இங்குள்ள உத்தியோகங்களே எட்டாதபோது வடநாடுசென்று வளமார் வாழ்க்கை பெறப்போகின்றனர்! அப்படிப் போகின்றவர்களும் கல்லூரிப் பட்டம் பெற்றவர்களில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகத்தானே இருப்பார்கள். இதற்காக ஆறும் வகுப்பிலிருந்து அனைவரும் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவானேன். கல்லூரி வகுப்புக்களில் விருப்பமுள்ளோர் படித்துக்கொள்ளட்டுமே என்று விட்டுவிடுவது தானே முறை. ஆட்சிமணையில் விற்றிருப்போர் வடநாட்டார் செல்வாக்குக்கஞ்சித்தான்செய்கின்றனரேயன்றி, நாட்டு மக்கள் நலத்தைக் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. காணாக் கண்ணினரும் கேளாக் காதினரும், எண்ணா சிந்தையினரும் எதைப் பொருட்படுத்துவர்? தன்னலம்தான்பெரிது.

இந்திமொழிக் கட்டாயத்தை எதிர்க்க வேண்டியவர்கள் தமிழ்ப் புலவர்களே என்கின்றனர் திராவிடர் கழகத் தலைவர்கள். இவ்விதம் கூறுவது மந்திரிப்பதவி பெறுகிறவர்களே நாட்டுரிமைக்குப் பாடுபட வேண்டும் என்பதுபோல் இருக்கின்றது. இந்தியால் தமிழும் தமிழரும் கெடுகின்றனர் என்றால், தமிழர் அனைவரும் எதிர்த்தால்தானே முடியும். தமிழ், தமிழ்ப் புலவர்கட்கு மட்டுமா சொந்தம். ஆதலின் எல்லாத் தமிழர்களும் ஒன்று கூடிக் கட்டாய இந்தியை அகற்றும் திட்டம் இடுதல் வேண்டும். திராவிடர் கழகத்தார்கள் தமிழ்ப் புலவர்கட்கு மட்டும் தமிழை உரிமையாக்காது அனைவர்க்கும் உரிமையாக்கி இந்திமொழிக் கிளர்ச்சியைத் தொடங்குவார்களாக."

* 'இந்தி' வந்துவிட்டது என்ற தலைப்புடன் உள்ள இந்தக் கட்டுரை "இலக்கியம்" எனும் செந்தமிழ் இதழில் உள்ளது; இதழாசிரியர் தோழர் இலக்குவனார், தமிழ்ப் பெரும் புலவராவார்.

## என் வாழ்வு

7-ம் பக்கத் தொடர்ச்சி

க்ஷேத்திர மனப்பான்மை கூடாது. நமக்குள் தாயாதிச் சண்டை ஏற்படக் கூடாது, ஏற்படாதிருக்க வேண்டுமானால், நாம் பாரதத்தை மறக்கவேண்டும். மேலும், பாரதத்திலே கூறி இருக்கிற, எதையும் நாம் இந்தக் காலத்தில் காணவும் முடியாது, நடைமுறைக்குக் கொண்டுவரவும் முடியாது-ஐவருக்குப் பத்தினி-பத்தினியை வைத்துச் சூதாடுவது—ஒவ்வொரு தேசத்துக்குப் போகும்போதும் அர்ஜுனன் ஒவ்வொரு கன்னியை மணம் செய்துகொள்வது—சூரியனை மறையச் செய்வது—இவைகளெல்லாம், நம்மால் முடியுமா, நமக்குத் தேவையா? நாம் ஏன் நமக்குத் தேவையற்ற அந்தப் பாட்டி கதைகளைக் கேட்டுக்கொண்டு காலத்தை வீணாக்கவேண்டும்.

இதற்கு, மிகப்பெரிய சந்தோஷ ஆரவாரம் கிளம்பிற்று. அதேபோது பாரதப் பிரசங்கிக்குக் கோபம் பிரமாதமாகி, எழுந்து நின்று,

"பாரதத்தைக் கேவலமாகப் பேசுகிற இந்தவாலிபரின் வாயைஅடக்க, ஒரு பத்துநிமிஷம் அவகாசம் தர வேண்டும்" என்று, தலைவரைக் கேட்டார்.

"உட்கார்! உட்கார்!" என்று ஜனங்கள் கூச்சலிடலாயினர்.

சிலர், "பெரியவர், பாபம். ஏதோ பேசட்டுமே" என்றனர்.

குழப்பத்தை அடக்க, முத்துராமன், ஒருநகைச்சுவையைவீசினார்.

"மகாஜனங்களே! அவர், பசுவும் புலியும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்ததாமே, அந்தக் காலத்து ஆசாமி" என்றார்.

பத்து நிமிஷங்களாயின சந்தோஷச்சந்தடி அடங்க.

"இது, பாரததேசத்தை பரங்கி ஆள்கிற காலம்! இந்தப்பரங்கி ஆட்சியை, பாரதப் பிரசங்கி, விஸ்தாரமாக எடுத்துக்கூறிய, பாஞ்சசன்யம், சக்ராயுதம், காண்டீபம், பாசுபதாஸ்திரம், எதனாலும் தடுக்க முடியவில்லை. ஆகையினாலே, இப்போது நமக்கு, அந்த ஆயுதங்களைப் பற்றிய பிரசங்கம் தேவை இல்லை. இப்போது நமக்கு வேண்டியது, ஒற்றுமை, கட்டுப்பாடு, வீரம், தியாகம், எல்லோரும் ஓர் குலம் என்ற எண்ணம். இதற்கு முற்றிலும் கேடு செய்யும் முறையிலே, பாரதப் பிரசங்கி, பழையகால வர்ணாஸ்ரமத்தை ஆதரித்துப்பேசினார். இங்கு நமக்குள் நாலு ஜாதி இருப்பது சரி என்று கூறினால், அந்த நாலு ஜாதியிலே, பிராமண ஜாதி உயர்ந்தது என்று கூறினால், பிறகு நாம் எந்த நியாயத்தைக்கூறி வெள்ளைக்காரனை விரட்ட முடியும் — அவன் கூறுவானே, உலகத்திலே ஒரு வர்ணாஸ்ரமம் இருக்கிறது, அந்த முறைப்படி வெள்ளைக்காரர், உயர்ந்தஜாதி, கருப்பர் தாழ்ந்தஜாதி! மஞ்சள் நிறம் படைத்த சீனர்கள் இடையிலே உள்ள ஜாதி—என்று பேசுவார்களல்லவா!

இந்த வாதம், ஜனங்களுடைய மனதை மிகவும் கவர்ந்தது. பாரதப் பிரசங்கியின் கோபத்தையும் அதிகமாகக் கிளறிவிட்டது. ஆவேசம் வந்தவர் போலவே ஆடினார். ஏதேதோ கூவினார். மேஜையைத் தட்டித் தட்டிப்பேசினார். கூட்டத்திலே, கலகம் ஆரம்பித்துவிட்டது.

உட்கார்! பேசு! உட்கார்!—என்ற சத்தம் மாறி மாறிக்கிளம்பிற்று.

இந்தச் சந்தடியில், விஷமிகள் யாரோ, கற்களை வீசினர். எங்கிருந்தோ ஒரு பன்றி கூட்டத்திலே புகுந்தது. பாரதப்பிரசங்கியைப் பின்புறமிருந்து யாரோ பிடித்திழுத்தனர். எங்கள் ஆட்கள், மிகச்சிரமப்பட்டு, அமைதியை உண்டாக்கினர். பாரதப்பிரசங்கியை, வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போயினர். முத்துராமலிங்கம், கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தி, பல அரசியல் கருத்துகளைப் பேசினார். ஆனால், அவருடைய பேச்சிலே பெரும்பகுதி, ஜாதியால் வந்தகேடு, மதத்தின் பெயரால் செய்யப்படும் அநீதி, ஆகியவைபற்றியே இருந்தது.

கூட்டம், முடிந்தபிறகு, பிரசங்கியை வீட்டுக்கு வரும்படி, இளைய பூபதி அழைத்தார். அவர், அன்றிரவே வேறு ஊருக்குப் போவதாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

அவர் போனபிறகு, கதர்க்கடை ஐயர், அலட்சியமாகக்கூறினார்.

"பெரிய வாயாடி அவன்! காங்கிரஸ் போர்வையிலே உலாவும் சூனுமானு" என்றார். (தொடரும்)

# இலக்கியத்தின் இலட்சியம்

14, 15—5—48 தேதிகளில் நாகர்கோயிலில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைமை வகித்த தோழர் நாரண துரைக் கண்ணன் அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம், இங்கு தரப்படுகிறது:—

“நம் தமிழ் இலக்கியத்தைப் பற்றிப் பேச நினைக்கும்போது எனக்குப் பெருமிதமே ஏற்படுகிறது. ஏன்? என்றால், நமது இலக்கியம் மிகப் பழைமையானது; பெருமை வாய்ந்தது. மிகத்தொன்மையான லத்தீன், கிரீக் முதலிய மொழிகளிலுள்ள இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்பே தமிழ் இலக்கியம் தோன்றிவிட்டது. அதாவது கி. பி. முதல் அல்லது இரண்டாவது நூற்றாண்டிலேயே தமிழ் மொழியில் இலக்கியங்கள் உண்டாய்விட்டன. இவ்விதம் ஏற்பட்ட தமிழ் இலக்கியம் பல நூற்றாண்டுகளாக ஜீவநதிபோல ஓடிக்கொண்டிருந்தது. இருந்தாற்போலிருந்து தமிழ் இலக்கிய ஊற்று அடிக்கடி வற்றி வந்தது. அரசர்களுக்கு ஆலாத்தியெடுப்பதாலும், மதங்களை ஆதாரமாகக் கொள்வதாலும் தான் இலக்கியம் வளரமுடியும் என்ற மனப்பான்மை வளர்ந்தது காரணமாக, இலக்கியத்தின் குறிக்கோளே குறுகிவிட்டது தான் இலக்கியத்தில் ஏற்பட்ட இவ்வரட்சிக்கு முக்கிய காரணமென்று நான் கருதுகிறேன். அரசாங்கங்களும் மதங்களும் இலக்கியப் பூங்காவைப் பாதுகாப்பது போல் பாவனை செய்து இலக்கிய கர்த்தர்களின் முற்போக்கான சிந்தனை வளர்ச்சியைப் பெரிதும் தடுத்துவிட்டன.

இவ்விதம் நாம் வளர்த்துவரும் நவீனத் தமிழ் இலக்கியத்தில் முக்கியமாக இரண்டுவித அபிப்பிராயங்கள் இருந்து வருவதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். “இலக்கியம் இலக்கியத்துக்காகவே” என்பது ஒரு கட்சி. “இலக்கியம் மக்களுக்காகவே; மக்களுக்காகத்தான் இலக்கியம்” என்பது மற்றொரு கட்சி. இலக்கியம் இலக்கியத்துக்காகவே என்பவர்கள், ‘இலக்கிய சிருஷ்டிக்கு ஒரு நோக்கம் அல்லது லட்சியம் இருக்கவேண்டியது அவசியமில்லை. அழகுணர்ச்சி ததும்ப— உண்மையுணர்ச்சி வெளிப்பட— எழுதுவது தான் இலக்கியம்; ஆதலால், கவின் கலைகளைப் போலவே அறிவையும் மனோபாவத்தையும் தொழிற்படுத்திப் படிப்பவர்களுக்கு இன்பத்தை உண்டாக்குவதுடன் அதன்வேலை முடிந்துவிடுகிறது’ என்று கூறுகின்றனர். இந்தக்கலையழகுடன் (artistic quality) இலக்கியத்தின் வேலை முடிந்து விடுவதாயின் இக்கூற்றுச் சரியானதுதான் என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனால், இலக்கியத்தின் பயன் அத்துடன் முடிந்துவிடவில்லை. படிப்பவர்களின் அறிவையும் மனோபாவத்தையும் தொழிற்படுத்துவதுடனில்லாமல் அவர்களுடைய உணர்ச்சியையும் பாவனாசக்தியையும் தொழிற்படுத்தும் குறிக்கோளுக்கும் (suggestiveness) நித்தியத்துவமும் (permanance) இலக்கியத்தின் சிறப்பியல்புகளாயிருப்பதால், அதற்கு ஒரு லட்சியம் அல்லது நோக்கம் உண்டு என்பது நன்கு புலப்படும். எனவே, இலக்கியம் என்பது மக்களுக்காகவே என்று கூறுவதில் இலக்கியப் பண்பாடு கெட்டுவிடாது. ‘வாழ்க்கை இன்பத்தை நுகர்வதற்கும் வாழ்க்கைத் துன்பத்தைப் பொறுத்தற்கும் மக்களுக்குக் கற்பிப்பதேதான் இலக்கியம்’ என்று டாக்டர் ஜான்ஸன் கூறியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. மக்களுக்காக இலக்கியம் என்றவுடனே, இலக்கிய ஆசிரியர்கள் மக்கள் விரும்புவதையெல்லாம் எழுதவேண்டும் என்று நான் கூறுவதாக யாரும் கருதக்கூடாது. மக்களுடைய மனோபாவத்தை உயரச் செய்து அவர்களுடைய ரஸனையுணர்ச்சியைப் பண்படுத்தி அவர்களுடைய தேவை என்ன என்பதை நிர்ணயஞ் செய்வதுதான் இலக்கியத்தின் நோக்கமாயிருக்க வேண்டும். அதைவிட்டு மக்கள் கீழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதற்காக, அவர்களைத் திருப்திப்படுத்த இலக்கியமும் கீழ் இறங்கிவிடக்கூடாது. அவர்களுடைய மனப்பண்பு, ரஸனை உணர்ச்சி முதலியவைகளை உயரச் செய்யவேண்டியது இலக்கிய ஆசிரியர்களின் கடமையாகும். காலநிலை முதலிய அவசியங்களை உத்தேசித்து நேரடியாகப் பிரசாரம் என்ற முறையில் நூல்கள் படைக்கப்பட்டாலும் இலக்கியப் பண்பு நிரம்பப் பொருந்தி இருக்கவேண்டும்.

இலக்கியம் சமுதாயத்தின் விளைபொருளாகும். இலக்கியத்துக்கும் சமுதாயத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சமுதாய நிலையைப் பிரதிபலித்துக் காட்டுவதுதான் இலக்கியம் ஆகும். சமுதாயத்தின் தன்மையை அதனிடத்துத் தோன்றிய இலக்கியங்கள் காட்டும். சமுதாயத்தின் தன்மை காலநிலைக்கு ஏற்றவாறு மாறுபடும். இவ்விதம் காலந்தோறும் மாறுபட்டு வரும் சமுதாயத்தின் தன்மையையும் அவ்வக் காலத்துத் தோன்றிய இலக்கியங்கள் தாம் காட்டும். ஒவ்வொரு காலத்துத் தோன்றிய இலக்கியங்கள் அவ்வக் காலத்துள்ள சமுதாய நிலையைப் பொறுத்தவையாயிருக்கும். நம் நாட்டின் கலை நாகரிகங்களையும் நம் முன்னோர்களின் பண்பாட்டையும் லட்சியத்தையும் இன்றளவும் அழியாமல் காத்து அவற்றின் பெருஞ்சிறப்பை உலகுக்குத் தெரிவித்துக் கொண்டிருப்பவை பண்டைத் தமிழ் இலக்கியங்களேயல்லவா! அவைகளை நம் இலக்கியங்கள் தமக்குள் பாதுகாத்து வைத்துவிடுவதால்தான், வழி வழி வரும் பிற்கால சந்ததிகளும் அறிந்து போற்றிப் பயன்பெறக் கூடியவையாயிருக்கின்றன. ஆகவே, நாம் சிருஷ்டித்து வரும் இலக்கியங்களும் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையைப் புலப்படுத்தி, மனிதனது ஆன்மாவையும் அவன் கருத்துக்கள், உணர்ச்சிகள், கலை நோக்கங்கள் முதலியவற்றையும் சொல்வடிவில் தீட்டி, மேற்குறித்த மனித நாகரிகம் முதலியவைகளுக்கு அடிப்படையாயுள்ள இலட்சியங்களை மானிட சமுதாயத்துக்குப் பாதுகாத்து வழங்குவதாகவும், பிற்காலச் சந்ததிகளும் விரும்பிப் படித்துப் பயன்பெறத் தக்கதாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால், உண்மை பற்றிய இலட்சியங்கள் அழிவில்லாத இலக்கியங்கள் வாயிலாகத்தான் புலனாகி நிலைபெற்றிருக்கின்றன.

மனித குலத்தின்பால் மிகுந்த இரக்கங்காட்டிப், பரந்தமனோபாவத்தோடு சமுதாயத்தில் மலிந்திருக்கும் குற்றங் குறைகளையும் ஊழல்களையும் எடுத்துக் காட்டி நீக்க முற்பட வேண்டும். அர்த்தமற்ற கொள்கைகளுக்கும் மூடப்பழக்க வழக்கங்களுக்கும் நாம் சிருஷ்டிக்கும் இலக்கியங்களில் சிறிதும் இடந்தரலாகாது.”

# பாலஸ்தீனம்

—*—

பாலஸ்தீனத்திலே, யூதராஜ்யம் அமைத்துவிட்டனர்.

அராபியர்களோ, அந்த ராஜ்யம் ஓர் அக்ரமம் என்று கூறிக் கடும் போர் புரிகின்றனர்.

யூதராஜ்யத்தை, அமெரிக்காவும் ரஷியாவும் அங்கீகரித்துவிட்டன.

போர் நடந்துகொண்டிருக்கிறது.

இந்தக் கட்டுரையில், யூதர், அராபியர், பற்றிய விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

## அராபியர்கள்

இந்த அராபியர்கள் யார் என்ற கேள்விக்கு அரேபியா தேசத்தில் உள்ளவர்கள் என்றமட்டும் சொல்லிவிடமுடியாது. ஏனென்றால் அதற்கு விரிவான அர்த்தம் சமீபத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. யார் யார் நமது தேசத்தில் வசிக்கிறார்களோ, நமது பாஷை பேசுகிறார்களோ, நமது கலாசாரத்தை அனுஷ்டிக்கிறார்களோ, நமது இலட்சியத்தை பங்கிட்டுக் கொள்கிறார்களோ அவர்கள் எல்லோரும் அராபியர்கள் என்று அராபிய லீக் கூறி இருக்கிறது.

எகிப்து, ஈராக், லெபானன், ஸாடி, அரேபியா, சிரியா, டிரான்ஸ்—ஜார்டன், யேமன், ஆகிய தேசங்கள் அராபிய லீக் அங்கத்தினர்கள். ஆகையால் இந்தத்தேசத்தவர்கள் யாவரும் அராபியர்கள் என்றாகிறது. இது தவிர ஆதி காலத்திலிருந்தே அராபியர்கள் லிபியாலிரனிகா டுனிஷ்யா, மொராக்கோ ஆகிய தேசங்களில் வசித்து வருகிறார்கள்.

ஆக மேற்குக்கோடி ஆப்ரிக்கா, வட ஆப்ரிக்காவில் ஆரம்பித்து மத்திய தரைக் கடல் தாண்டி, வடக்கே பெர்ஷியா, தெற்கே கனியாவில் பரவி, இந்தியன் கடலில் வியாபித்து, ஸெய்ஸில்லிஸ், லகாடிவ் தீவுகள், மால்டைவ்ஸ் தீவுகளில் வியாபித்து இந்தியாவில் பரவி, மலேயன் ஆர்ச்சிபிலாகோ, ஜாவாக்கடல் வரையும் அளாவி இருக்கிறது அவர்களுடைய கணக்குப்படி.

இருபது கோடி பேர்கள் கொண்ட ஒரு உலகமாக அரபு உலகம் கற்பனை செய்யப்பட்டிருக்கிறது. இவர்களில் எழுபது இலட்சம் பேர்கள் வடக்கு ஆப்ரிக்காவிலும், ஆசியா மைனரிலும் இருக்கிறார்கள். இந்தியா, பாகிஸ்தானில் உள்ள பத்துக்கோடி முஸ்லிம்களுக்கு அராபிய உலகத்தோடு தொடர்பு உண்டு. அவர்களும் உருது (பெர்ஷியன் அராபிக்) பேசுகிறார்கள். மற்றும் மதச்சட்டங்கள் சம்பந்தமாக அராபியருடன் ஒற்றுமைகள் இருக்கின்றன.

பழங்காலத்தில் அராபியர்கள் பெரிய வியாபாரிகளாக இருந்தார்கள். இப்போதும் அதில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார்கள். அவர்கள் கலாசாரத்தையும், படிப்பையும் எங்கும் பரப்பி இருக்கிறார்கள். ஸ்பெயினிலிருந்து ஜாவா வரைக்கும் அவர்களது சித்திரவேலைப்பாடுகள் அமைந்திருக்கின்றன. அவர்களது மதமும் பல தேசங்களில் பரவி இருக்கின்றது.

பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் ஸ்பெயினிலிருந்து சீனா வரைக்கும் அவர்கள் போய் வியாபாரம் செய்யாத தேசமே கிடையாது.

அராபியர் பலதாரக் கொள்கையை கடைப்பிடிப்பவர்கள். அராபிய ஸ்திரீகளுக்கு கணவனின் வருமானத்தில் சட்டப்படி ஒரு பகுதி உண்டு. விவாகரத்து செய்துகொள்ள உரிமை உண்டு அது மட்டுமின்றி அவளுடைய சீதனத்தைக் கூட கணவன் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். மூன்றுமாதம் கணவன் பிரிந்து இருந்தால் அவள் விவாக ரத்து கோரலாம். அராபிய ஸ்திரீகள் ஆடம்பரமான நகைகள் அணிந்து கொள்வார்கள்.

அராபிய தேசங்களில் ஆண் சாதுவாக இருப்பது கூடாது. அது கேவலம். துப்பாக்கி, குதிரை சவாரிப்பழக்கம் ஆரம்ப முதலே யுவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்படும்.

அஸிரியர்கள், பொனீஷியர்கள், எதியோபியர்கள், ஆர்மீனியர்கள், யூதர்கள் ஆகியவர்களைப்போலவே இவர்களும்ஒரே பிரிவிலிருந்துவந்தவர்கள்; ஆப்ரஹாமின் மூத்த மகனான இஸ்மேலின் வம்சத்தில் வந்தவர்கள் அராபியர்.

கி. பி. ஆறாம் நூற்றாண்டு வரையில் அராபியர்கள் பாலைவனங்களில் கூட்டம் கூட்டமாக வசிக்கும் ஒரு ஜாதியினராகவே இருந்தார்கள். கி. பி. 570-ல் முஹமது பிறந்தார். அவருக்கு 50 வயதாகும்போது தவறான வழியில் செல்லும் அவர்களை நேர்வழிக்குத் திருப்புவதைத் தன் கடமையாக கொண்டார். இஸ்லாமிய மதம் பரவ ஆரம்பித்தது.

பாலஸ்தீனம், முஸ்லிம்களுக்கு க்ஷேத்திரமாகும். ஆப்ரஹாம், மொஸஸ் ஆகியோரும் அங்கே பிறந்தவர்கள். ஜெருஸலத்திலிருந்துதான் மஹமது தேவலோகத்துக்குச் சென்றதாக நம்பப்படுகிறது. மஹமது கி. பி. 632-ல் இறந்தார்.

இந்தக் காலத்தில் பாலைவனங்களில் கூட்டமாக வசித்த அராபியர்கள் ஒன்று சேர்ந்த ஒரு தேச ஜனங்களாகிவிட்டார்கள். நாடுகளை ஜெயிக்க ஆரம்பித்தார்கள். பாலஸ்தீனம், சிரியா, பெர்ஷியா, எகிப்து, மொராக்கோ இங்கெல்லாம் திக்விஜயம் செய்தார்கள்.

## யூதர்கள்

இந்த யூதர்கள் யார், அவர்கள் ஒரு தேசத்தினரா, ஒரு ஜாதியினரா, அல்லது ஒரு மத வகுப்பினரா? இந்தக் கேள்விக்கு பதில் திட்டமாகச் சொல்ல முடியாது. நிலத்தை அடிப்படையாக கொண்டது ஒரு தேசம். தற்போதுயூதர்களுக்கென்று இதுவரைக்குமே தனித்தேசம்கிடையாது. ஆகவே அவர்கள் ஒரு தேசத்தினர் அல்ல.

அவர்களை ஒரு ஜாதியினராக ஹிட்லர் கருதினார். ஆனால்சுத்தமான ஜாதி என்று ஒன்று கிடையவே கிடையாது என்று விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். யூதர்கள் ரத்தக் கலப்பு இல்லாத ஆங்கிலேயனை அநேகமாக இல்லை என்று கூடச் சொல்லப்படுகிறது.

மத நம்பிக்கைகளிலும் ஆசாரங்களிலும் எத்தனையோ வித்யாசப்பாடுகளுக்கு "ஜுடைஸம்" இடங் கொடுக்கிறபடியால் அதைத் தனித்து ஒரு மதம் என்று சொல்வதற்கில்லை.

ஆகவே யூதர்கள் ஒரு 'ஜனங்கள்' அவ்வளவுதான் சொல்ல முடியும். ஐக்யமாக வாழும் மக்கள். உலகம் அவர்களை தனித்த யூதர்கள் என்று முத்திரை போட்டு விட்டதால் ஒன்றானார்கள். இவ்வளவுதான்.

யூதர்களைப் பற்றி, யாருக்கும் அவர்கள் அன்னியர், பணம்வட்டிக்குக் கொடுப்பவர்கள் என்பதுதான் பொதுவாகத் தெரியும்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு தாங்கள் வாழ்ந்த இடத்திலிருந்து அவர்கள் விரட்டப்பட்டார்கள். உலகம் பூராவும் பரவி இருக்கிறார்கள். சிலர்தான் திரும்பியிருக்கிறார்கள். தங்களுக்கு எப்போது ஸ்திரமான வீடு ஒன்று இல்லையோ, எங்கேயும் அவர்கள் அன்னியர்கள்தானே!

யூதர்கள் பலர் தாங்கள் புகுந்த தேசங்களில் தங்கித் தங்கள் தேசமாக்கிக் கொண்டுவிட்டார்கள். என்றாலும்சனாதன யூதர்கள் அடுத்த வருஷம் ஜெருஸலத்தில் தாங்கள் இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். இழந்த ஜெருஸலத்தைத் தாய் நாடாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறார்கள். அதனாலேயே கெனியா, யுகாண்டா முதலிய பிரதேசங்களில் அவர்களுக்கு இடம் கொடுப்பதாகச் சொன்ன போதிலும் மறுத்துவிட்டார்கள். பாலஸ்தீனம் தங்களுக்குத் தாய் நாடாக இருக்க வேண்டும் என்று பிடிவாதம் காட்டுகிறார்கள்.

லேவாதேவிக்காரர்களாகஅவர்கள் ஒரு

காலத்தில் பெயர் வாங்கியதில் உண்மை உண்டு. ஐரோப்பா முழுவதும் அவர்கள் பரவினதும் லேவாதேவியையும், வியாபாரத்தையுமே தொழிலாகக் கொண்டனர். அதற்கு முன்பு அவர்கள் விவசாயிகளாக இருந்தவர்கள் தான்.

பல தேசங்களுக்குப் போன பிறகு அவர்களுக்கு வியாபாரமும் லேவாதேவியும்தான் சௌகர்யமாக இருந்தது. இதன் பயனாக அவர்களுக்கு எங்கும் ஒரு கெட்ட பெயர் ஏற்பட்டது.

சென்ற முப்பது வருஷங்களாகத்தான் யூதர்களுக்கும் பாலஸ்தீனத்திற்கும் உறவு நெருக்கமடைந்தது. உலகம் பூராவும் இருந்து புரொபஸர்கள், டாக்டர்கள், வக்கீல்கள் வியாபாரிகளுமாக அங்கு வந்து குவிந்துவிட்டார்கள்.

நிலத்தை பண்படுத்தி விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவாகவே உழைப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். சகலருக்கும் சமமான பங்கும்உண்டு. உழைப்பதற்கு கூலி என்று கிடையாது. பலனைப்பங்கிட்டுக்கொள்வார்கள். சமமாக கூட்டமாகச் சேர்ந்து உண்பதும், பொதுவான கூட்டுப் பண்டக சாலையிலிருந்து சாமான்கள் வாங்குவதும், தங்கள் வாராந்திர தேவைக்கு வேண்டிய அளவுக்குப் பணம் பெறுவதும், வரும் லாபத்தை எல்லாம் கூட்டு சமூகத்துக்கே தந்துவிடுவதும் அவர்களுடைய வழக்கங்கள். பொதுவுடைமைக்கு ஒப்பான வாழ்க்கை அவர்களுடையது. நிலத்தை ஒரு டிரஸ்ட் சொத்தாக அவர்கள் கருதுகிறார்கள். யூத தேசிய நிதியின் சொத்தாகும் நிலம். இந்த நிதிக்கு யாவரும் பண உதவி செய்கிறார்கள் உலகமெங்குமிருந்து.

பாலஸ்தீன யூதர்களிடையே ஆணும் பெண்ணும் சமமாக உழைக்கிறார்கள். ஆண்களுக்குள்ள உரிமைகள் யாவும் சட்டப்படி பெண்களுக்கும் உண்டு.

யூதர் பள்ளிக்கூடங்கள் பாலஸ்தீனத்தில் ஏராளமாக இருக்கின்றன. பிரபல ஹீப்ரு சர்வகலாசாலை இருக்கிறது. கல்வியில் அவர்களுக்கு அசாத்ய நம்பிக்கையும் மதிப்பும் உண்டு. எந்த யூத வைபவங்களிலும் பணக்காரனுக்கு இரண்டாவது இடம்தான் கொடுப்பதுண்டாம். அவர்களில் படிக்காதவனைப் பற்றி வெறுத்தும் பேசுவார்கள். ——

# ★ நாம் இருவர் ★

[பாரதி சுப்பையா]

‘நாம் இருவர்’ நாடகமல்ல.’ நாடகமே உலகம் என்ற உண்மையை நாட்டினருக்கு மெய்ப்பிக்க வேண்டி வாழ்க்கையையே நாடகமேடையாக மாற்றிக் காட்சியளிக்கின்ற இரு நவீன உருவங்களின் படப்பிடிப்பு.

சகுந்தலை ஒரு ரிஷிகுமாரி. ஆசிரமவாசி. பொங்கிவரும் பெருநிலவு போன்ற ஒளிமுகத்தாள். புதுப் பருவமோகினி. பூங்காவனத்திடையே உலவிக்கொண்டிருந்தாள் ஒரு மாலை. அந்த ஆசிரமத்துப் பக்கம் வேட்டையாடச்சென்ற அரசிளங்குமரன் துஷ்யந்தன் புள்ளிமானுக்குப் பதிலாகப் பூங்காவிலே பூவையைக்கண்டான்; பூத்தது காதல். சகுந்தலையும் துஷ்யந்தன் மீது காதல் கொண்டாள். கணையாழியை மாற்றிக்கொண்டு அந்தக் காவிடத்தே இருவரும் காந்தர்வ மணம் செய்துகொண்டனர். பின்பு துஷ்யந்தன் பிரிந்தான். துருவாச முனியின் சாபத்தால் சகுந்தலையை மறந்தான். சகுந்தலை பிரிவாற்றாமையால் வாடி, துஷ்யந்தனை நாடி, மன்றேறி வாதாடி, மோதிரத்தைக் காட்டித் துஷ்யந்தனை அடைந்தாள்.

இது கதையில் வரும் சகுந்தலையின் வரலாறு. இந்த நிகழ்ச்சியைக் கவிஞன் காளிதாசன் தனது சாகுந்தலம் என்னும் காவியத்திலே காதல் ரசம் நனி சொட்டச் சொட்டப், பாடிய வாய் தேனூறும் வண்ணம் பாக்களால் வர்ணித்துப் பாடியிருக்கிறான். காவியத்தில் மட்டுமல்ல, ஓவியத்திலும் இன்று ஓடும் திரைப்படத்திலும் இந்த இரு இன்ப வடிவங்களைக்கண்டு நாம் களிப்பெய்துகிறோம். ஆனால் இந்தக்காவிய நிகழ்ச்சியையே தோற்கடிக்கும் முறையில் சமீபத்தில் சென்னையிலும் டில்லியிலும் இரண்டு சம்பவங்கள் நடந்துள்ளன.

சகுந்தலா- வயது 22. சென்னையில் ஓர் காரியாலயத்தில் டைப்பிஸ்ட் வேலை பார்க்கிறாள். ராஜசேகரன் சென்னை காலேஜ் ஒன்றில் B. A. மாணவன். சகுந்தலாவுக்குத் தூரபந்து. ஆதலின் அடிக்கடி அவள் வீட்டுக்கு வந்து அவள் பெற்றோரிடம் பேசிக்கொண்டிருப்பான். சகுந்தலா படித்தபெண்ணாதலால் அவனுடன் கலகலவென்று வார்த்தையாடிக் களங்கமற்றுப் பேசிப்பழகினாள். ராஜசேகரன் தருணம்கிடைத்தபோதெல்லாம் காதல்ரசத்தை வார்த்தையாலும், பார்வையாலும் அவள் ரத்தத்தினுள் பாய்ச்சினான். நாளடைவில் காரியாலயத்துக்கும் வந்து அவளோடு நெருங்கிப்பழகினான். கடற்கரைக்கு அவளைத்தனியே உலாவுவதற்கு அழைத்துச்சென்றான். வழிநெடுகக்காதற்கதைகளையும், காந்தர்வ மணத்தின் மேன்மைகளையும் பற்றி உபதேசம் செய்து தன்னை மணந்துகொள்ளும்படி கேட்டான். சகுந்தலாவுக்கு ஆரம்பத்தில் அந்த எண்ணமில்லை. தன் பெற்றோரை எண்ணித் தயங்கினாள். ஆனால் ராஜசேகரன் பக்குவமாய் ஊட்டிய காதல் உபதேசங்கள் பாலில் கலந்த மோர்த்துளிபோல் வேலைசெய்ய ஆரம்பித்தன. பிறகு பெற்றோரையும் மீறி ராஜசேகரனைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள்.

கலியாணத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. குறித்த இடத்தில் குறித்த நேரத்தில் சகுந்தலா ஆஜரானாள். அங்கு ராஜசேகரனும் மூன்று புரோகிதர்களும் இருந்தார்கள். ஓமம் வளர்த்து மந்திரம் ஓதினார்கள். சகுந்தலாவையும் ராஜசேகரனையும் ஒரு மணையில் உட்காரவைத்தார்கள். தலைமைப் புரோகிதர் தாலியை மந்திரித்து ராஜசேகரன் கையில் கொடுத்தார். அவன் சகுந்தலாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

சில மாதங்கள் கழிந்தபின் ஒரு நாள் பத்திரிகையில், “என் மகன் ராஜசேகரனுக்கும் சகுந்தலா என்ற பெண்ணுக்கும் நடந்ததாகச் சொல்லப்படும் காந்தர்வமணம் சட்டப்படி செல்லுபடியாகாது. இன்று முதல் அவர்களுக்குள் யாதொரு தொடர்பும் கிடையாது” என்று ஒரு நோட்டீஸ் வெளியாயிற்று. கலியாணத்தை நடத்திவைத்தவர்கள் போலிப் புரோகிதர்கள் என்றும், அவர்கள் ராஜசேகரனின் நண்பர்கள் என்றும் தெரிய வந்தது. அதைத்தொடர்ந்து ராஜசேகரனுக்கும் அனுசூயா என்ற பெண்ணுக்கும் திருமணம் என்ற முகூர்த்தப் பத்திரிகையும் தபாலில் கிடைத்தது.

சகுந்தலா திடுக்கிட்டாள். திகைத்தாள். பெருமூச்செறிந்தாள் ‘கண்ணீர் சொரிந்தாள். கோர்ட்டில் வழக்குப்பதிவு செய்து உண்மையுரைத்து ராஜசேகரன் தனது கணவன்என்று வாதாடினாள்.

வழக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி ‘தந்தி’ப் பத்திரிகையில் 16—5—48 இதழில்

வெளியாகி யிருக்கிறது. இதோ மற்றோர் சம்பவம்.

சகுந்தலா-வயது 16. அழகிய யுவதி. புதுடெல்லியிலுள்ள ஓர் கல்லூரி மாணவி. எஸ். வி. ராமன் புதுடெல்லி சர்க்கார் காரியாலயத்தில் உணவு இலாகாவில் வேலை செய்து வரும் ஒரு குமாஸ்தா. இருவரும் தென்னிந்தியர்கள். தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள். டில்லியிலுள்ள தென்னிந்திய சங்கத்தின் அங்கத்தினர்கள். இருவரும் அடிக்கடி சந்தித்து அளவளாவினார்கள். காதல் பிறந்து வளர்ந்தது. இராமன் ஆசைவார்த்தை கூறி அவளைமணந்து கொள்வதாக வாக்குறுதியளித்தான்.

சிலமாதங்கள்சென்றன. இராமன் சகுந்தலாவைக் கலியாணம் செய்து கொள்ளச் சாக்குப்போக்குக் கூறினான். சகுந்தலா வற்புறுத்தினாள். இராமன் இணங்கவில்லை. அவனை வழிக்குக் கொண்டுவரச் சகுந்தலா பலவாறு முயன்றாள்.

டில்லி தென்னிந்திய சங்கத்தின் சார்பில் சத்தியமூர்த்தி ஞாபகார்த்த நிதிக்காக ஒரு நாடகம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் கதாநாயகன் எஸ். வி. இராமன். கதாநாயகியைப் பொறுக்கியெடுக்கும் உரிமையும் அவனுக்கே அளிக்கப்பட்டது. சகுந்தலா தன்னைத் தேர்ந்தெடுக்கும்படி கூறினாள். அவ்வாறே தேர்ந்தெடுக்கப்பட்டு ஒத்திகை நடைபெற்றதில் அவள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அசல் நாடகத்தில் அவள் நடிக்க முடியவில்லை. அதனால் பெருத்த ஏமாற்றமடைந்தாள்.

தென்னிந்தியசங்கத்தலைவர்பி.எம். சுந்தரத்தை சகுந்தலா இருமுறை அணுகி, "ஐயா, எனக்கும் மிஸ்டர் இராமனுக்கும் நீண்டநாள் காதல் தொடர்பு இருந்து வருகிறது. என்னைக் கலியாணம் செய்து கொள்வதாகவும், என்னிடம் அபார காதல் கொண்டிருப்பதாகவும், என்னையன்றி உயிர்வாழ முடியாது என்றும் என்னிடம் வாக்குறுதி யளித்தவர் இன்று என்ன காரணத்தாலோ தயங்குகிறார். தாங்கள் தயவுசெய்து இராமனை என்னை மணந்துகொள்ளும்படி தூண்டவேண்டும்" என்றுகேட்டுக் கொண்டாள். அதற்கு அவர் "அம்மணி, நான் இராமனிடம் இதை வற்புறுத்திக் கூற முடியாமைக்கு வருந்துகிறேன். நீ உண்மையில் இராமனையே காதலித்தால் கோர்ட்டில் வழக்குத் தொடர்வதே நலம்" என்று யோசனை கூறினார்.

சகுந்தலாவின் வேதனை அதிகரித்தது. தன்தோழி பொருத்தியினிடம் கூறி வருந்தினாள். தோழி இராமனிடம் தூது சென்று, "மிஸ்டர் இராமன், நீங்கள் சகுந்தலாவிடம் காதல் கொண்டிருப்பது உண்மையானால் ஏன் அவளைக் கலியாணம் செய்துக்கொள்ளக்கூடாது" என்று கேட்டாள். அதற்கு அவன், "எனக்கும் சகுந்தலாவுக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. ஆதலால் அவளைக் கலியாணம் செய்யும் பிரச்னையே எழவில்லை" என்று கூறினான். இதையறிந்த சகுந்தலாவின் மனம் முறிந்தது.

அரசாங்கக் காரியாலயத்தில் ஓர் நாள் அனைவரும் அமைதியுடன் அவரவர் இடத்தில் அமர்ந்து அலுவலில் ஈடுபட்டிருந்தபோது, திடீரென்று உணவு இலாக்காவில் வேட்டுச் சப்தம் கேட்டுத் திகைத்தனர். அங்கு சகுந்தலா கையில் சுழல் துப்பாக்கியுடன் கண்களில் தீப்பொறி பறக்க நின்றுகொண்டிருந்தாள். ஆபீஸில் ஒரே பரபரப்பு. டெலிபோன்கள் பறந்தன. போலீசார் வந்து சகுந்தலாவைக் கைது செய்தனர். கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. சகுந்தலா குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிக்கப் பட்டாள். அப்பொழுது அவள் கொடுத்த வாக்குமூலம் பின்வருமாறு:—

"நான் என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுக்கிறேன். யாரையும் கொல்லவேண்டுமென்ற விருப்பம் எனக்குக் கிடையாது. இராமன் எனக்கு விளைவித்தகேட்டை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காக உணவு இலாகாவில் இராமன் வீற்றிருந்த இடத்தில் ஒருமுறை சுட்டேன். இதர சகோதரிகளுக்கும் இம்மாதிரி கேடு நேர்வதைத் தடுக்கவேதான் இவ்விதம் செய்தேன். உண்மையை வெளிப்படுத்த இவ்வழியைக் கையாண்டேன். பிற்பாடு எழுத்து மூலம் முழு விபரத்தையும் தெரிவிப்பேன்."

வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த விபரம் தினமணி 17—5—48 இதழில் காணப்படுகிறது. இதைக் காண்போர் யாரும் வியப்பும் திகைப்பும் அடையாமலிருக்க முடியாது.

சென்னையிலும், டில்லியிலும் நடந்த இந்தச் சம்பவங்களில் ஆச்சரியமான முறையில் கதாநாயகிகள் இருவரும் சகுந்தலா என்ற பெயர் வாய்ந்தவர்கள். இருவரும் படித்த யுவதிகள். நாகரீகத்திற் சிறந்த நாரீமணிகள். இருவரும் காதலுக்குப்பாத்திரமாகி காவியச் சகுந்தலையைப்போல் காந்தர்வ மணம் செய்துக்கொண்ட பின் காதலர்களால் கைவிடப்பட்டவர்கள். இருவரும் ஆடவர்களின் கபட நாடகத்துக்குச் சிவப்பு விளக்குக் காட்டத் துணிந்துவிட்டனர்.

சென்னைச் சகுந்தலா குழைந்தாள். டில்லிச் சகுந்தலா குமுறினாள். இவள் பதியை அடைய விரும்பினாள். அவள் பழிக்குப் பழி தீர்க்க உறுதி கொண்டாள். இவள் பெண்ணுக்குப் பாதுகாப்புத்தேட விரும்பினாள். அவள் பெண்ணுலகை எச்சரிக்க விரும்பினாள். இவள் புரோகிதத்தைப் பலப் பரீட்சை செய்ய எண்ணிச் சட்டத்தைத் துணைக்கழைத்தாள். அவள் சட்டத்தை எள்ளி நகையாடித் துப்பாக்கியைத் துணைக்கொண்டாள். இவள் தென்றல், அவள் புயல். இவள் புள்ளிமான். அவள் புலி. இவள் கணவனைக் கைது செய்தாள். அவள் காதலனால் கைது செய்யப்பட்டாள். இவள் வாதியானாள். அவள் பிரதிவாதியானாள். இவள் கணவனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினாள். அவள் காதலனால் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டாள்.

"அட பாபி, ஆசைவார்த்தைக் கூறி மோசம் செய்த நாசக்காரா, இன்பம் என்று கூறி எட்டிக்காய் தந்த இழிஞனே, ஈவிரக்கமற்ற சண்டாளா, உன்னை நம்பி ஏமாந்து வசைப்பழியை ஏற்றேனே. என்னை மணந்ததாகச் சொல்லி ஏமாற்றிவிட்டாயே, கதையில் வரும் துஷ்யந்தனாக உன்னைக் கருதினேனே. நம் இருவரின் காதற்கனியாய் உதிக்கும் குழந்தை பரதனைப் போல் இப்பாரெங்கும் புகழ்பரப்பும் என்று பகற்கனவு கண்டேனே. ஏ பாதகா, காதலனாய்க் காட்சியளித்த காதகா, தாலி கட்டிய என்னைத் தள்ளிவைத்துவிட்டு வேறு மணஞ் செய்துகொள்ளத் துணிந்த உனக்கு நெஞ்சில்லையா? நீதியில்லையா? உனது கனிரசப் பேச்செங்கே? கடற்கரை உபதேசமெங்கே? காட்டிய காவியமெங்கே? காந்தர்வ மணமெங்கே!

"காதல் எங்கே? எங்கே?" என்று கண்ணீர் வடித்துக் கதறும் சென்னைச் சகுந்தலாவையும், அவள் முன் மனச்சாட்சியை அடகுவைத்து விட்டு மண்டையிலே தேள் கொட்டியவன்போல் மன்றமேறி நிற்கும் ராஜசேகரனையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

"ஏ பெண்ணுலகமே, ஆண்களின் ஜாலவலையில் சிக்கி அவதிப்படும் ஆரணங்குகளே, எழுங்கள். விழித்து எழுங்கள். இதோ இந்த ரிவால்வர் வேட்டுச் சப்தம் உங்களை உறக்கத்தினின்று எழுப்ப உதவட்டும்! நயவஞ்சகர் நிறைந்த நாட்டிலே, நடமாடும் நச்சுப் பொய்கைகளாய்த் திரியும் ஆடவர் கூட்டத்தைப் பாருங்கள். ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என வகுத்து ஆரணங்குகளைச் சீரழித்து, ஆணவங்கொண்டு அலையும் அயோக்கியக் கூட்டத்தைப் பாருங்கள். இதோ என் வாழ்வு உங்களுக்கோர் எடுத்துக்காட்டாய் இருக்கட்டும். எச்சரிக்கை. காதல் காதல் என்று கூறிக் கண்ணை இழக்கவேண்டாம். காதல் என்பது காமுகரின் துருப்புச் சீட்டு. ஏ ஆணுலகமே, பெண்களை மலர்களென வருணித்துவிட்டு வண்டுருவங் கொண்டு வசதியுடன் காதல் வாணிபம் செய்யும் வஞ்சகக் கூட்டமே, உஷார். புள்ளிமானை வனப் புலியாக்கும் அளவுக்கு உங்கள் கொடுமை மிஞ்சிவிட்டது. காதலாம் காதல்—எங்கே காட்டுங்கள் உங்கள் நெஞ்சை. உங்கள் காதலுக்குத் தகுந்த பரிசு இதோ டுமீல்—டுமீல்" என்று சுழல் துப்பாக்கியைக் கையிலேந்திச் சூறுவளியைக் கிளப்பும் டில்லிச் சகுந்தலாவையும் அவள் முன்னே பேயறைந்தவன் போல் கண்கள் பிதுங்க, மனம் நடுங்க, காதலாவது கத்தரிக்காயாவது என்று நினைக்கும் இராமன் ஆகிய இருவரையும் திரையிட்டுப் பாருங்கள்.

"அடி தங்காய், சகுந்தலா, எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி என்பது நம்மளவில் மெய்யாய்ப் போச்சுதடி. நாம் இருவரும் புத்தியைப் பறிகொடுத்து விட்டோமே. காதல் காதல் என்று ஏட்டிலே படித்ததை நம்பி மோசம் போனோமே. இந்த உலகம் நம்மை அநியாயமாய்த் தூற்றுகிறதே. இதற்கென்னடி செய்வது? மானத்தைக் காப்பாற்ற இனி என்னடி வழி? நமது மானம் போனாலும் போகட்டும்; இந்த மானங்கெட்ட ஆடவரைக் கண்டு சந்தி சிரிக்கட்டும். மதம், சாஸ்திரம், புரோகிதம் இவற்றின் திரைமறைவில் சதிசெய்யும் வஞ்சகர்களின் குட்டு வெளிப்படட்டும். பணத்துக்காகக் காதலை விற்கத் துணிந்த காதகரைக் கண்டு உலகம் காரித்துப்பட்டும் என்று எண்ணி என் கணவரைக் கோர்ட்டுக்கு இழுத்து விட்டேன். இதன் முடிவு என்னவாகுமடி" என்றுஏங்கும் சென்னைச் சகுந்தலாவையும்,

"அக்கா, நீ சுத்தப் பைத்தியக்காரி; முடிவு என்னவானால் என்ன? பெண்புத்தி பின்புத்தி என்று ஏடெழுதி விட்டு ஒரு புத்தியுமில்லாது எக்களிக்கும் ஆண்கள் கூட்டத்தைப் பழிக்குப் பழி வாங்க எண்ணாமல் அழுகிறாயே. கனல் பொறி வீசவேண்டிய கண்களிலிருந்து கண்ணீர்த் துளி வடிக்கிறாயே! பேதாய், இதோ பார். நம்மை ஏமாற்றிக் காமத்துக்கு இரையாக்கிக் கொண்ட கயவர் கூட்டம் நம்மைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கிறது. நம்மை விசாரிக்கும் நீதிபதிகளும் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்தான். இவர்களிடத்தில் பெண்களுக்கு நீதி கிடைக்குமா? புலிக்குப் புள்ளிமானின் உள்ளத்துடிப்புத் தெரியுமா? பாம்புக்குத் தவளையின் வேதனை விளங்குமா? இன்னுமா இந்த உலகில் வாழவிரும்புகிறாய்? இழந்தகாதலனை இன்னுமா மீட்க விரும்புகிறாய்! அட உணர்ச்சி கெட்டவளே, சுடு. உன்னைக்காதலித்த நெஞ்சை முதலில் சுடு. சுடு. இந்தா சுழல் துப்பாக்கி" என்ற கூறிடும் டில்லியின் வீரவல்லியையும் நேருக்கு நேர் நிறுத்திப்பாருங்கள்.

"மிஸ்டர் இராமன், காதற்கலையில் நீ இன்னும் பாலபாடங்கூடத் தேறவில்லை. அந்தக்கன்னியிடம் நீ இன்னும் அதிகசாகசம் காட்டியிருக்க வேண்டும். சிறிது முரட்டுத்தனமாய் நடந்துகொண்டு விட்டாய். அதனால்தான் அவள் சீற்றங்கொண்டு சீறிவிட்டாள். ஆபீஸ் அறையின் சுவரிலே பட்டு, செங்கல் துண்டைப்பேர்த்த அந்தக் குண்டு உன் நெஞ்சிலே பாய்ந்திருந்தால் உன்கதி என்னவாயிருக்கும்? நல்லவேளை பிழைத்தாய். பெண்கள்மெல்லிய ரோஜாவைப் போன்றவர்கள். கானம் பாடும் வண்டு மலருக்குச் சேதமின்றித், தேனைமட்டும் உறிஞ்சிச் சென்றுவிடுவதுபோல நாமும் பெண்களிடம் நடந்து கொள்ள வேண்டும். தேன் உறிஞ்சும்போதே மலரையும் கசக்கினால்தேனும் இனிக்காது, மலரும் மணக்காது. சரி, போனது போகட்டும். தைரியமாயிரு. இதனால் ஒன்றும் கேடுவராது. இனிமேல் வரும் காதலிகளிடம் எச்சரிக்கையாய் நடந்து கொள்" என்று இதோபதேசம் செய்யும் ராஜசேகரனையும்,

"ஆமாம் மிஸ்டர் ராஜசேகர், நீ கூறுவது உண்மைதான். உன்னைப் போல் சாமார்த்தியமாய் நடந்து கொள்ளாமற்போனேன். சகுந்தலாவை வீழ்த்தியமாயத்திலே, பணக்காரி அனுசூயாவையும் வசப்படுத்தி விட்டாயே. பேஷ்! சட்டமும், மதமும், சமூகமும் நமக்குத்துணைசெய்யும்போது நமக்கென்ன கவலை. பாவம்! சகுந்தலா பாலைவனத்திலே பாடும் பறவை" என்று பாசாங்கு செய்யும் இராமனையும் படம் பிடித்துப்பாருங்கள்.

"என்ன சார், சட்டம் தர்மத்துக்குக் கட்டுப்படுவதாகக் காணோமே. பாவம், சகுந்தலா, புரோகித ஏற்பாட்டின்படி நடந்ததிருமணத்துக்கு ஒப்பி ஏமாந்தாள். இல்லை, ஏமாற்றப்பட்டாள். அது அவள் குற்றமா? அல்லது புரோகிதத்தின் குற்றமா? ஆனால் அன்று நடந்த புரோகிதம் போலியானது என்று சட்டம் வாதிக்கிறது. நியாயப்படி சகுந்தலா ராஜசேகரனின் காதலி. நடைமுறைப்படி அவள் அவன், மனைவி. ஆனால் சட்டப்படி அவள் வேறு. இதற்கு எப்படித்தீர்ப்பு அளிப்பது" என்று சென்னை நீதிபதி மயங்குவதாகவும்,

"ஆமாம்! சார், உண்மையிலேயே அதிசயமான கேஸ்தான். நம் நாட்டில் சட்டம், நியாயம், நடைமுறை இம்மூன்றும் ஒரே வட்டத்தில் நின்று, வேகத்தில் பந்தயஓட்டம் ஓடுகின்றன. ஒன்றையொன்று

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi Street. Conjeeveram.